இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

**PAATHUKAVALAN**

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 இதழ்: 15 பக்கங்கள்: 08 திகதி 23-09-2012 விலை: 15.00

...ITY OF JAFFNA ... RARY ... CAL DIVISION

## இலங்கை ஆயர் பேரவையின் வேண்டுகோள்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை (CBCSL) கூட்டத்தின் போது எமது சமுதாயத்தில் மனித, சமய மதிப்பீடுகள் குறைந்து கொண்டு போவதில் கவனம் செலுத்தப்பட்டது. சிறைக்கைதிகள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டமை, அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட உடல் உபாதைகள், மரணம் அதுவும் சிறைக்குள்ளேயே இத்தனையும் நடைபெற்றமை வருந்தத்தக்கதாகும். சிறைக்கைதிகள் மாண்புடன் கவனிக்கப்பட வேண்டும், அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என தேசிய சட்டம் கூறுகிறது. எனவே இத்தகைய அசம்பாவிதங்களை ஆயர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

கிறிஸ்தவ விசுவாசத்தின்படி மனிதன் இறை உருவிலேயே படைக்கபட்டிருக்கின்றான் *(தொ.நூ 1:27)*. ஆதலால் மனிதன் எப்போதும் மரியாதையுடனும், மாண்புடனும் நடாத்தப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## மன்னார் கரிசல் ஆலயத்தாக்குதலுக்கு கண்டனம்

மன்னார், கரிசல் கிராமத்திலுள்ள கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருநாள் ஆயத்த நாள் வழிபாடுகள் செப்ரெம்பர் 7ம் திகதி மாலை நடைபெற்றுக்கொண்டிருந்த போது இனம் தெரியாத சிலர் திடீரென அங்கு வந்து மக்கள் நிறைந்திருந்த ஆலயத்துள் கற்களை வீசியும் வெடிகளைக் கொழுத்தியெறிந்தும் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றிருக்கின்றனர். இதனால் சிலர் காயங்களுக்குள்ளாகினர். சில இளைஞர்கள் உடனே ஆலயத்திற்கு வெளியே வந்து கல்வீசியவர்களை இனம் காண முயன்ற போது அவர்களும் தாக்குதலுக்குள்ளாயிருக்கின்றனர்.

யாழ் கததோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதானத்திற்கான ஆணைக்குழு இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றது. கரிசலில் உள்ள கத்தோலிக்க ஆலயம் இப்பதியில் உள்ள மிகப் பழமை வாயந்த ஆலயங்களிலொன்று. இப்பகுதியில் கத்தோலிக்கரும் பிற சமயத்தவரும் குறிப்பாக முஸ்லீம்களும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## திருத்தந்தையின் 24வது வெளிநாட்டுத் திருப்பயணம் நிறைவு

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தமது 24வது வெளிநாட்டுத் திருப்பயணமாக லெபனானுக்கு கடந்த 14ம் திகதி சென்றார். மூன்று நாள் மேய்ப்புப் பணித் திருப்பயணத்தை நிறைவுசெய்து விமான நிலைய பிரியாவிடை நிகழ்வில் திருத்தந்தை அவர்கள் லெபனான் நாடு தனது பாரம்பரியச் சமயப் பன்மைத்தன்மையைத் தொடர்ந்து காத்து வருமாறும், அதனை எதிர்க்கும் சக்திகளின் தாக்கத்தை உறுதியுடன் எதிர்த்து நிற்குமாறும் கேட்டுக்கொண்டார். தமக்கு இனிய நல்வரவேற்பளித்த அந்நாட்டு அரச தலைவர்கள் உட்பட அனைத்து மக்களிற்கும் நன்றியையும் தம் ஆசீரையும் தெரிவித்தார்.


# அஞ்சாதே, கலங்காதே ஆண்டவர் நம்மோடு இருக்கிறார்

### சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் யாழ் - ஆயர்

யாழ். மறைமாவட்ட யாத்திரைத்தலமான கடலலை தாலாட்டும் சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய வருடாந்த பெருவிழாத் திருப்பலி 15-09-2012 அன்று யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழாவுக்கு வருகை தந்த பெரும்திரளான இறைமக்களை நோக்கி 'அஞ்சாதீர்கள், கலங்காதீர்கள் ஆண்டவர் நம்மோடு இருக்கிறார்' என ஆயர் தம் மறையுரையினூடாக மக்களைத் திடப்படுத்தினார்.

மேலும் ஆயர் அவர்கள் தம் மறையுரையில் போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்தும் எம்மத்தியில் சரியான நிம்மதி தோன்றவில்லை. பல வருடங்களாகியும் நாம் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றோம். இன்னும் எம் வாழ்வில் பல்வேறுபட்ட அச்சங்களோடும் கலக்கங்களோடும் வாழ்கினறோம்.

அன்று கபிரியேல் தூதர் கலக்கமுற்ற மரியாளிடம் அஞ்சாதே ஆண்டவர் உன்னோடு இருக்கின்றார் என கூறி திடப்படுத்தினார். அன்னை



மரியாள் தம் வாழ்வில் பல துன்பங்கள், சவால்களை சந்தித்த வேளைகளிலெல்லாம் ஆண்டவரின் உடனிருப்பை உணர்ந்தாள். நாமும் அச்சங்கள், கலக்கங்கள் மத்தியிலும் மனம் தளராது ஆண்டவரின் உடனிருப்பை உணருவோம். எம் மனித வல்லமைகளில் சக்திகளில் நம்பிக்கைவையாது ஆண்டவர் நம்மோடு இருக்கின்றார் என்பதை நம்பி வாழ்வோம்.

# இனவாதம் சார்ந்த பிரச்சினைகளையே தமிழர்கள் எதிர்கொள்கின்றனர்

யாழ். வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் அதிகாரிகள் குழுவினர் கடந்த 17ம் திகதி யாழ் ஆயர் இல்லத்தில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களை சந்தித்து யாழ். குடாநாட்டு மக்களின் சம கால வாழ்வு. மனிதவுரிமைகள், அரசியல் நிலை பற்றி வினவிய போது ஆயர் தெரிவித்த சில முக்கிய கருத்துக்கள்.

இலங்கையில் சுமார் 70 வீதம் பௌத்தர்கள் உள்ளனர். அதனடிப்படையில் இதனை ஒரு பௌத்த நாடாகவும் தமிழர்களை சிறுபான்மையினராகவும் கருதும் மனநிலை சிங்கள சமூகத்திடம் உள்ளது.



இங்கு இருப்பது மதம் அல்லது சமூகம் சார்ந்த பிரச்சினை இல்லை. இனவாதம் சார்ந்த பிரச்சினைகளையே தமிழர்கள் எதிர்கொள்கின்றனர்.

நீண்டகால யுத்தம் முடிவடைந்த பின்னர் அபிவிருத்தி என்ற விடயத்திலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஆனால் யுத்தம் தோற்றம் பெற்றதற்கான காரணங்களை அறிந்து அதனை தீர்ப்பது குறித்து அக்கறை எடுக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாக உள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் தமிழர் பிரதேசங்களில் இராணுவத்தலையீடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்டாமல் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை செயற்படுத்த அரசு தயாராக இல்லை. வெளியுலகத்துக்கு காட்டுவதற்காகவே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டது போன்று உள்ளது. இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு முன்வந்தால் பிரச்சினைகளை ஓரளவிற்கேனும் தீர்த்துக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டினார்.

### இலங்கையில் இயேசு சபை மாநிலத்தின் பொன் விழா

இலங்கையில் இயேசு சபை உருவாக்கப்பட்டதன் பொன் விழா கடந்த 09-09-2012 அன்று இயேசு சபை மாநில முதல்வர் ஜெயராஜ் இராசையா தலைமையில் டலுகமவில் நடைபெற்றது.

### நடனக்கலையில் திருமறைக்கலா மன்றத்தின் சாதனை

திருமறைக்கலா மன்றத்தின் மாணவியாக நடனக்கலையை கற்று, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல மேடைகளில் நடனமாடி நடனத்துறையில் நுண்கலைமாணி, நாட்டியக் கலாவித்தகர் பட்டங்களைப் பெற்று திருமறைக்கலாமன்றத்தின் நடன ஆசிரியராக பணியாற்றும் திருமதி சுதர்சினி கரன்சன் தம் மாணவியான செல்வி டெல்சியா அந்தோனிப்பிள்ளையின் நடன அரங்கேற்ற நிகழ்வை 09-09-2012 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடாத்தியது பெருமைக்குரிய விடயமாகும். ஒரு கத்தோலிக்க நடன ஆசிரியை ஒரு கத்தோலிக்க மாணவியின் நடன அரங்கேற்றத்தை நடாத்தியது எம் மண்ணில் இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

### மறைக்கல்விக் கண்காட்சி – யாழ் தூய மரியன்னை பேராலயம்

மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு யாழ் பேராலய மறையாசிரியர்களும், மறைக் கல்வி மாணவர்களும் ஒன்றிணைந்து மறைக்கல்விக் கண்காட்சியை முன்னெடுக்கின்றார்கள். ''இயேசுக்கிறிஸ்துவைப் பற்றி அறிவதே உண்மையான மறைக்கல்வி'' என்பது இக்கண்காட்சியின் மையப்பொருள். இக்கண்காட்சி புரட்டாதி மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும். அன்று காலை 7.15 சிறப்புத் திருப்பலியைத் தொடர்ந்து யாழ். மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி. ஜோர்ஜ் அடிகளாரால் இக்கண்காட்சி திறந்து வைக்கப்படும்.

### குருத்துவ திருநிலைப்படுத்தல்

இளவாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும் யேசுசபையைச் சார்ந்தவருமான திருத்தொண்டர் எழில் றஜன் இராசேந்திரம் (யே.ச) அவர்கள் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் புரட்டாதித் திங்கள் 29ம் திகதி (சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார். குருவாக திருநிலைப்படுத்தப்படவிருக்கும் இவரது பணிக்காகவும், வாழ்வுக்காகவும் இறைவனிடம் மன்றாடுவோம்.

# எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

## ஏன் இந்த திருவிழாக்கள் ?

ஆலயம் என்பது இறைநம்பிக்கையுடையோர் இறைவனின் நாமத்தினால் ஒன்று கூடி தம் இறைநம்பிக்கையை வெளிப்படுத்தி வழிபாடு செலுத்தும் இடம். அது இறைவன் வாழும் புனித இல்லம். பொதுவாக ஆலயம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புனிதருக்கென அர்பணிக்கப்படுகின்றது. அவரின் பெயரால் அவ்வாலயம் அழைக்கப்பட்டு திருவிழா கொண்டாடப்படுகின்றது. இப்புனிதர்கள் எம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் தான். அவர்கள் தாம் இவ்வுலகில் வாழ்ந்த போது வாழ்வின் சவால்களை தாண்டி இறை நம்பிக்கையில் உறுதியுடன் இருந்து, இறைவனுக்கும் மனிதருக்கும் ஏற்புடையவராகி , புனிதமடைந்து, இறைவனிடம் சென்றவர்கள் .

ஆலயத் திருவிழாக்கள் கொண்டாடப்படுவதன் அடிப்படை நோக்கம், அவ்வாலயத்தை சூழ்ந்து வாழும் மக்கள், தம் இறைநம்பிக்கையை வெளிப்படுத்தி, தம் பாதுகாவலரின் பரிந்துரையால் தாம்பெற்ற நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றிகூறுவதும், புனிதரின் முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றி இறைநம்பிக்கையில் உறுதியாக இருந்து, கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு சாட்சியம் பகிர்ந்து, இறைவனிடம் செல்ல தகுதியுள்ளவர்களாக மாற்றுவதுமாகும். ஆனால் இன்று எம் ஆலயத் திருவிழாக்களில் நடைபெறுவது என்ன?

உண்மையான இறைநம்பிக்கையுடன் இறைநம்பிக்கையை எம் வழிபாட்டில், செயல்களில் வெளிப்படுத்துகின்றோமா? அதை ஆழப்படுத்துகின்றோமா? சாட்சியம் பகர்கின்றோமா? புனிதர்களின் இறையாட்சிப் பண்புகளான அன்பு, மன்னிப்பு, இரக்கம், பொறுமை, தியாகம் போன்ற பண்புகளை வாழ்வில் வாழ்வாக்க முயல்கின்றோமா? இல்லை. மாறாக நாம் இறைநம்பிக்கையை, புனித வாழ்வின் விழுமியங்களை அழிக்கின்ற வீண் ஆடம்பரங்களுக்கு முன்னுரிமை கொடுத்து திருவிழாக்களை அர்த்தமற்றதாக்குகின்றோம். ஆயிரம் ஆயிரம் பணம் செலவழித்து அலங்காரங்கள் கட்டுகின்றோம், வானவேடிக்கைகள் காட்டி வெடி கொழுத்துகின்றோம், அணியவேண்டிய புனிதரின் பண்புகளை அணியாது அலங்கார ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிகின்றோம்.

ஆடம்பரச்செலவு, தனிப்பட்டதனாலும், பொதுவானதானாலும் குறிப்பிட்ட அளவில் எவ்வித நன்மையும் ஏற்படுத்தாமல், ஆசைகளை தீர்த்துக்கொள்வதற்காகவும், மற்றவர்கள் தம்மையும் தம் பகட்டான செயல்களையும் மதிப்பதற்காகவும், பார்த்து ரசிப்பதற்காகவும் செலவழிக்கப்படும்போது அது தவறானது, மனச்சான்றிற்கு புறம்பான சமூக விரோதச் செயலாகவும் மாறுகின்றது. ஆலயத்திரு விழாக்களின் அர்த்தமற்ற செலவுகள், அர்த்தமற்ற ஆடம்பரங்கள் பிரிவினைகளையும், முரண்பாடுகளையும், சண்டை சச்சரவுகளையும் கூட எற்படுத்து கின்றன. "உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன்; உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை." (ஆமோஸ் 5:21).

எமது ஆலய திருவிழா நவநாட்கள், விழாக்கள், பவனிகள் வெறும் சடங்காக, பாரம்பரியமாக அமையாது எதற்காக திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றதோ அவை நிறைவேற்றப்படக்கூடிய புதிய வழிமுறைகளையும், செயற்திட்டங்களையும் முன்னெடுப்பது எல்லோருடைய கடமையாகும்.

**அருட்பணி. இ. பெற்றுஸ் தயாபரன்**
ஆசிரியர், "பாதுகாவலன்" கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
Email : editorkavalan@gmail.com

## – அறிந்துகொள்ளுவோம் –

## புனித வின்சென்ற் டி போலும் – தொடரும் அவர் பணிகளும்

எதிர்வரும் 27ம் திகதி தூய வின்சென்ற் டி போல் சபையினர் தம் பாதுகாவலரின் திருநாளைக் கொண்டாடுகின்றனர். இதனை முன்னிட்டு தம் பாதுகாவலரின் வாழ்வும், பணிபற்றியும் தம் சபையின் தோற்றம், பணிபற்றியும் குறிப்பிடுகின்றனர்.

**முகவுரை:-**

கத்தோலிக்க திருச்சபையானது, இறைமகன் இயேசுவின் போதனைகளை பின்பற்றி அவருடைய பாதச்சுவட்டிலே பயணித்து அவருடைய சீடர்களாக வாழ்ந்து இறையாட்சி கனவை நனவாக்க உழைத்த பலரை புனிதர்களாக பிரகடனப்படுத்தி திருப்பீடங்களிலே வணங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது. இவர்களின் வாழ்வின் முறைமைகளை பின்பற்றி நாமும் புனிதர்களாக வாழ்ந்து இறையரசை எமதாக்க வேண்டும் என்பதே திருச்சபையின் பெரு விருப்பமாகும். அந்த வகையில் செப்டம்பர் மாதம் 27ம் திகதி **"ஏழைகளின் அன்பர்"** என்று அழைக்கப்படுகின்ற தூய வின்செனற் டி போலின் திருவிழாவை திருச்சபை பெருமகிழ்வோடு கொண்டாடுகின்றது.

**தூய வின்சென்ற் டி போல்**

தூய வின்சென்ற் டி போல் 1581ம் ஆண்டு லூர்த்து நகரில் பிறந்தார். இளமையிலேயே வறுமையான வாழ்வையும் எளிமைத் தனத்தையும் அனுபவித்த இவர் செல்வந்தரின் ஊதாரித் தனமான வாழ்வை முழுமையாக வெறுத்தார். இறைமகன் இயேசுவின் போதனையால் கவரப்பட்டு 1600ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பணிவாழ்வில் அபரிமிதமான சவால்களை எதிர்கொண்ட போதும் விசுவாசத்திலே உறுதியாய் இருந்தார். வறிய மக்களை கொண்ட பங்கு ஒன்றில் பங்குத் தந்தையாக பணியாற்றிய போது வறிய குடும்பம் ஒன்றின் தேவையை நிறைவு செய்ய பங்குமக்களிடம் உதவிகோரினார். கிடைக்கப் பெற்ற உதவிகள் அளவுக்கதிகமாக இருப்பதைக் கண்ட இவர் இருப்பவர்களிடம் இருந்து பெற்று இல்லாதவர்களுக்கு கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார். இதன் முடிவாக **"வண்டி உணவு"** என்ற தர்ம சபையையும், **"தர்ம சீல மகளிர் சபை"** என்ற பெண்களுக்கான பிறரன்புச் சபையையும் ஏற்படுத்தி வெற்றி கண்டார். **"ஏழைகளை இறைவனின் மக்கள் என்ற மனப்பான்மையுடன் அணுக வேண்டும்"** என்பதையும் **"பணி செய்யப்படல் வேண்டும் யாரால் செய்யப்பட்டதென்பதல்ல"** என்பதையும் தன்னுடைய விருதுவாக்காக கொண்டு வாழ்ந்த இவர் தன்னுடைய 88வது வயதில் இறைபதம் அடைந்தார். திருத்தந்தை 12ம் கிளமென்டால் 1737ம் ஆண்டு யூன் மாதம் 17ம் திகதி புனிதராக பிரகடனப்படுத்தப்பட்டார்.

**நிறுவுனர் அருளாளர் பிரெட்றிக் ஒசானம்**

1813ம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி மிலான் நகரில் பிறந்த அருளாளர் பிரெட்றிக் ஒசானம் அவர்களால் 1833ம் ஆண்டு பாரிஸ் நகரில் முதன் முதலாக வறிய மக்களுக்கு உதவி செய்யவென ஆரம்பிக்கப்பட்ட பிறரன்புச் சபை முழுமையாக பல்கலை கழக மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வந்தது. இவர்களுடைய பணிகளும் தூய வின்சென்ற் டி போலின் பணிகளும் ஒத்ததாக இருந்தமையால் 1834ம் ஆண்டு தூய வின்சென்ற் டி போலின் பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்டு அன்று முதல் **"தூய வின்சென்ற் டி போல் சபை"** என அழைக்கப்பட்டது. 179 வருடங்களை கடந்த நிலையில் உலகளாவிய ரீதியில் இன்றும் சிறப்பாக ஆன்மீக பிறரன்பு பணிகளை ஆற்றுகின்றது என்று சொன்னால் அது இறைவனின் மாபெரும் கொடையாகும். 1853ம் ஆண்டு புரட்டாதி மாதம் 08ம் திகதி தூய வின்சென்ற் டி போல் சபை உறுப்பினர்கள் சூழ்ந்து நின்று செபிக்க **"என் தேவனே! என் தேவனே! என் மீது இரக்கமாயிரும்"** என்று கூறி இறைபதம் அடைந்தார். இவர் 1997ம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி அருளாளர் இரண்டாவது யோவான் பவுல் திருத்தந்தையால் அருளாளராக பிரகடனப்படுத்தப்பட்டார்.

**இலங்கையில் புனித வின்சென்ற் டி போல் சபை**

இலங்கையில் முதன்முதலாக தூய வின்சென்ற் டி போல் சபை யாழ் மறைமாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பது எமக்கு பெருமை சேர்க்கும் ஒரு நிகழ்வாகும். 1905ம் ஆண்டு யாழ்ப்பாணம் தூய மரியன்னை பேராலயத்தில் இறைபணி புரிந்த அமலமரித்தியாகிகள் சபையைச்சேர்ந்த **"இளைஞர்களின் அப்போஸ்தலர்"** என்று அழைக்கப்படும் அருட்சகோதரன் இயூஜின் குருசோ அவர்களால் புனித வளன் **(தொடர்ச்சி 3ம் பக்கம்)**

## நூற்றாண்டு கடந்த நிலையில் சுருவில் தூய அன்னைமரி மாதா ஆலயம்



ஊர்காவற்றுறை சுருவில் அன்னை மரிமாதா ஆலயத்தின் 101வது ஆண்டு நிறைவு விழாவானது அன்னையின் வருடாந்த திருவிழாவான 08-09-2012 அன்று கொண்டாடப்பட்டதுடன் புதிய பங்குமனையும் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 30-08-2012ல் பங்குதந்தை அருட்பணி. E.S.C. மரியதாஸ் அடிகளார் தலைமையில் கொடியேற்றம் நடைபெற்று நவநாள் கொண்டாடப்பட்டது. நற்கருணை விழா திருப்பலி தீவக மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்பணி. ஸ்ரான் பிலிப்பு அடிகளார் தலைமையிலும், நற்கருணை வழிபாடு தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்பணி. மைக்கல் சவுந்தர நாயகம் அடிகள் தலைமையிலும் நிறைவேற்றப்பட்டது. 101வது ஆண்டு நிறைவு விழா, திருவிழா திருப்பலியானது யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் புதிய பங்குமனையும் திறந்து வைக்கப்பட்டது.

101வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் அன்னையின் ஆலயமானது தனக்கென ஒரு வரலாற்றைக் கொண்டது. சிறுகுடிசையாக காணப்பட்ட ஆலயமானது 1854ல் திரு. சுவாம்பிள்ளை என்பவரினால் சிறு ஆலயமாக அமைக்க தீர்மானிக்கப்பட்ட போதும் 1892ல் திரு. தோமஸ் சூசைப்பிள்ளை என்பவரால் அக்கட்ட வேலை ஆரம்பிக்கப்பட்டு 1911ல் அன்னைக்கு ஆலயம் அமைக்கப்பட்டது.

1968ல் இத் தேவாலயமானது அருட்பணி. குணசீலன் அடிகளார் காலத்தில் ஹீமான் மந்திரி சவிரிமுத்து அவர்களால் விஸ்தரிக்கப்பட்டது. யுத்த சூழ்நிலை இடம்பெயர்வுகளைத தொடர்ந்து இவ்வாலயமானது 2002ல் மீண்டும் புனரமைக்கப்பட்டு அன்னைக்கு விழா எடுத்துவரப்பட்டதுடன் இவ் வருடம் தனது 101வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடியது.

இவற்றுடன் 1912ல் கட்டப்பட்டு பழமையின் சின்னமாக விளங்கிய பங்கு குருமனையானது நிசாப்புயல் அனர்த்தத்தைத் தொடர்ந்து சேதமடைந் தமையால் புதிய பங்கு குருமனை அமைக்க திட்டமிடப்பட்டு 2010ல் அடிக்கல் நாட்டப்பட்டு தாயகத்திலும் மற்றும் தாயகத்தின் வெளியிலும் வாழும் உறவு களின் உதவியுடன் அழகிய புதிய பங்கு குருமனை அமைக்கப்பட்டு யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரால் அன்னையின் பெருவிழாவன்று திறந்து வைக்கப்பட்டது.

## 22 வருடங்களின் பின் சேந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் திருவிழா

கடந்த 1990ம் ஆண்டு போரின் போது சேந்தாங்குளத்தைச் சேர்ந்த குடும்பங்கள் யாவும் இடம் பெயர்ந்து சென்ற பின் மீண்டும், கடந்த ஆண்டு 2011 மார்ச் 18ம் திகதி மீள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கபபட்டார்கள். அங்கிருந்த புனித ஆரோக்கியநாதர் ஆலயமானது முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளதால் அங்குள்ள சேதமடைந்த ஆலயப் பணிமனைக் கட்டடப் பகுதியின் ஒரு சிறு பகுதி வழிபாட்டு இடமாகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மாதம் ஆகஸ்ட் 27ம் திகதி, காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒபபுக்கொடுக்கப்பட்டது. அருட்பணி. ஜெயசீலன் அடிகளார் திருவிழாத் திருப்பலியைத் தலைமையேற்று ஒப்புக் கொடுத்தார். திருப்பலியின் பின் புனிதரின் திருச்சுருபப் பவனியும், திருச்சுருப ஆசிரும் இடம்பெற்றது. வலித்தூண்டல் பங்குத் தந்தை யே. அ. அருள்தாசன் அடிகளாரின் தலைமையில் விழா சிறப்பாக நடை பெற்றது.

# திருக்குடும்ப சபையின் தியானயோக அழைத்தல்

1862 இல் யாழ் மண்ணில் திருக்குடும்ப சபைச்சகோதரிகள் தாம் தடம் பதித்த 150ஆவது, ஆண்டை நன்றி நிறை இதயங்களுடன் நினைவுகூர்ந்து தம் சபைபற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் எழுதும் தொடர் கட்டுரை.

\- ஆசிரியர் -

திருக்குடும்பச்சபை நிறுவுனர் வண.பீற்றர் பியன்வெனு நோ ஆய் அடிகள் தமது குருத்துவப் பயிற்சிக்காலத்தில் நீண்ட மணித்தியாலங்களைச் செபத்திலே செலவிட்டார். இறைவனின் மகிமையையும் அவரது அரசையுமே தேடினார் இறைவனின் அன்பினால் அவர் தொடப்பட்டு இறை அன்பைத் தியானிக்கும் ஆர்வம் அவரை சார்த்தது. இவர் ஓர் செபத்தின் மனிதன். கடவுளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்ட ஆழ்நிலைத் தியானக்குரு. நம் சபைச் சகோதரிகளுக்கும் நண்பர்களுக்கும் எழுதும் கடிதங்களிலெல்லாம் இறைஒன்றிப்பின் அவசியத்தையும், இறைவனின் விருப்பத்திற்கு எந்நிலையிலும் பணிந்து வாழ வேண்டிய மனப்பக்குவத்தைப்பற்றியும் அடிக்கடி வலியுறுத்தி எழுதுவார்.

எனவே இவரிடம் விளங்கிய தியானயோக பற்றுதியும் இறை அனுபவமும் தியானயோக அழைப்புக்கு வித்திட்டது. சகோதரிகளிற் சிலர் இவ்விதமான அழைப்பை விரும்பி "எப்போ ஆரம்பிப்பீர்" என்று நிறுவுனரிடம் கேட்டபோது "இன்னும் குறித்த நேரம் வரவில்லை" என்று பதிலிறுத்தார். இறைவனின் திருவுளம் நிறைவேற 1859ஆம் ஆண்டு ஆனித் திங்கள் முதலாம் நாள் தியானயோக இல்லத்தை போர்டோவில் 'மாட்டியாக்' எனனும் இடதகில் ஆரம்பித்தார். தியானயோகச் சகோதரிகள் சபையின் மறை பொருளாக, அதன் உயிர்நாடியாக இருக்க வேணடுமென விரும்பினார். 1822 ஆம் ஆண்டு இயேசு நற்கருணையில் அற்புதமாகக் காட்சியளித்து அளித்த ஆசீருக்கு இடையறாது நன்றி செலுத்தும் ஆராதனையில் ஈடுபட்டிருப்பர். அமைதியிலும் ஏகாந்தத்திலும் "தேவன் மாத்திரமே" என்னும் மனப் போக்கில் தொடர்ச்சியான செபம், மகிழ்ச்சியான தபம் என்னும் திருச்சபையின் நோக்கை இவர்கள் வாழ்கின்றனர். குழும வாழ்வு இவர்களுக்கு



முதன்மையானது. குழுமத்தில் வாழும் ஐக்கிய வாழ்வு சபைச்சகோதரிகளுக்கும், உலகம் முழுவதற்குமே அதிர்வுகளாகப் பரவிச் செல்கின்றது. இன்று உலகில் அன்பற்ற நிலை, பிரிவுகள், பிளவுகள் மலிந்து காணப்படும் நிலையில் இவர்களது செபம், அன்பு வாழ்க்கை. வார்த்தைகள், செயற்பாடுகள், முழு உலகையும் ஊடுருவுமென்ற உறுதிப்பாடு உண்டு. இவர்களது மறைந்த நாளாந்த வாழ்வில் இயேசுவோடு ஒன்றித்து ஒப்புக் கொடுக்கும் ஆராதனை புகழ்ச்சியும் நன்றியும், அனைத்துலகுக்கும் எழுப்பும வேண்டுதல்களும் இயேசுவில் அனைவரும் ஒரே குடும்பமாக இருக்க ஆசிக்கும் இவர்களது வாழ்வின் பிரமாணிக்கத்தைத் தூண்டுகின்றது.

இவர்களைத் தேடி வருவோரை வரவேற்று, செவிசாய்த்து ஆறுதல் அளித்து, செபத்தால் அவர்கள் மனங்களை அமைதிப்படுத்துகின்றனர். பலதுறவியர், குருக்கள், பொதுநிலையினர் தம் ஆன்மீக புதுப்பித்தலுக்காக தியானங்களில் ஈடுபடவரும்போது அவர்களை வரவேற்று உதவிசெய்வர். சபையின் அங்கத்தவர்களுடன் அந்நியோன்னிய அன்பில் இணைவதுடன் சபையின் விசேட விழாக்களில் பங்குகொண்டு மகிழ்வர். இயேசு, மரி, சூசை நசரேத்தில் செபத்திலும், தியானத்திலும் தம் வாழ்வைச் செலவழித்து மறைந்த வாழ்வு வாழ்ந்தார்களோ அவர்களைப் பின்பற்றி இவர்களும் அன்பு வாழ்வு, அமைச்சல், சுயமறுப்பு, தியாக வாழ்வு, ஆன்மவாஞ்சை கொண்ட புண்ணிய வாழ்வை வாழ்கின்றனர்.

இலங்கையில் 1973 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த அழைப்பை நீர்கொழும்பைச் சேர்ந்த "போளவிளானை" என்னும் இடத்தில் சகோதரிகள் சேர்ந்து வாழத்தொடங்கினர். 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் என்னும் இடத்தில் ஆரம்பித்து 1990ஆம் ஆண்டு வரைக்கும் அங்கு வாழ்ந்தார்கள். இவர்களின் வாழ்வுப் பிரசன்னம் போருக்குள் துடி துடித்து அமைதி இழந்து, ஆறுதல் அற்று பல இடப்பெயர்வுகளுக்கும் முகம் கொடுத்த மக்களுக்கு அன்பை, அமைதியை, ஆறுதலை அள்ளிக் கொடுத்த ஓர் அவுடதமாக அமைந்தமை மறுக்க, மறக்க முடியாத உண்மை ஆகும். ஆழ்நிலைத் தியானத்தில் என்றும் இறைவனுடன் சங்கமாகும். இவர்கள் போரின் கொடுமையால் இருக்க முடியாத நிலையில் கந்தானையில் உள்ள நாகொட என்னும் இடத்தில் தென்னிலங்கைச் சகோதரிகளுடன் வாழ்ந்து வருகின்றனர். இன்று திருக்குடும்ப சபையின் தியானயோக அழைப்பின் இல்லங்கள் உலகிலே நானகு தேசங்களில் அமைந்துள்ளன. பிரான்ஸ், ஸ்பெயின், சிறி லங்கா, ஆர்ஜென்ரீனா.

"ஆண்டவர் எவ்வளவு இனிமையானவர் என்று சுவைத்துப் பாருங்கள். அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறு பெற்றோர்" *(தி.பா 34:8)*

தகவல்

**யூபிலிவிழா அமைப்பாளர்,**
**யாழ்-மாகாண இல்லம்,**
**யாழ்ப்பாணம்.**

(தொடரும்)— — —

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 50 ஆண்டுகள் நிறைவையொட்டிய கட்டுரைத் தொடர்

**அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்**

இ
ன்
னு
ம்
பு
தி
தா
ய்
ம
ல
ரு
ம்
.
.
.

முதலாம் இரண்டாம் வத்திக்கான் சங்கங்களுக்கிடையில் திருச்சபையில் இரண்டு கருத்தியல் போக்குகள் காணப்பட்டன.

ஒன்று திருச்சபையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக இருந்த மரபார்ந்த இறையியல், இது எதிர் சீர்திருத்தச் சங்கமென அழைக்கப்படும் திரிதெந்தின் பொதுச் சங்கத்தின் பின்னாக திருச்சபையில் கவனமாகப் பேணப்பட்டு வந்த தற்காப்புநிலை இறையியல்.

மற்றையது சீர்திருத்தவாதிகளின் கருத்துக்களால் தூண்டப்பட்டு காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை திருச்சபையில் நாடிநின்ற முற்போக்கு இறையியல்.

இந்த இரண்டு இறையியல்போக்குகளினதும் பொருதுகளமாகவே இரண்டாம் வத்திக்கான் சங்கக் கூட்டத்தொடர்கள் காணப்பட்டன. உண்மையில் இந்த இரண்டு இறையியல் போக்குகளின் கலப்பாகவும், சமரசமாகவுமே நாங்கள் சங்க ஏடுகளை நோக்க வேண்டும்.

சங்கத்திற்கு முன் இத்தகைய முற்போக்கு இறையியல்கள் புதுப்பித்தல் இயக்கங்களாக திருச்சபையில் வளர்ச்சி கண்டிருந்தன. இவ்வியக்கங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய துறைகளில் புதுப்பித்தலை கோரி நின்றன.

திருவழிபாட்டு புதுப்பித்தல் இயக்கம் வழிபாட்டில் மாற்றங்களை கோரிநின்றது சுயமொழியில் வழிபாடுகளை நடத்துவது, குறிப்பிட்ட பிரதேசங்களுக்குரிய பண்பாட்டம்சங்களை உள்ளடக்குவது வாழ்வையும், வழிபாட்டையும் இணைப்பது போன்றவை இவ்வியக்கத்தின் முன்னெடுப்புக்களாகும்.

பொதுநிலையினர் புதுப்பித்தல் இயக்கம் திருச்சபையில் பொதுநிலையினருக்குரிய இடத்தை மீளவும் பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகக்கொண்டிருந்தது. தொடக்க திருச்சபையில் திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் எத்தகையதொரு கூட்டுப்பொறுப்பு காணப்பட்டதோ அத்தகைய ஒரு நிலையை மீளக்கொண்டுவர இவ்வியக்கம் முயன்றது.

கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் கிறிஸ்தவர்களிடையே காணப்பட்ட பிளவை சரிசெய்ய வேண்டும். பல்வேறு கிறிஸ்தவ

## மீண்டும் புதிதாய்...

### கருத்துக்கள் கலந்த சங்கம்,

சபைகளுக்கிடையில் புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் அதிகரிக்க வேண்டும். அதன்மூலம் பிளவு பட்ட கிறிஸ்துவையல்ல ஆனால் ஒரு கிறிஸ்துவையே அனைத்து சபைகளும் அறிவிக்கவேண்டும் என்ற நோக்கங்களோடு இயங்கிவந்தது.

சமூக செயற்பாட்டு இயக்கம் திருச்சபைக்கும் உலகிற்கும் இருந்த இடைவெளியை நீக்கவேண்டும் ஆன்மீகமும் இலௌகீகமும் இரண்டு வேறுபட்ட விடயங்கள், திருச்சபை ஆன்மீகத்தில் மட்டும் அக்கறை செலுத்தினால் போதும் உலகவிடயங்களில் ஈடுபடத்தேவையில்லை என்ற அணுகுமுறையை மாற்ற வேண்டும். திருச்சபை உலகிலேயே இருக்கின்றது. ஆகவே உலகை ஏற்றுக் கொள்ளுவதும், வலுப்படுத்துவதும் அதனுடைய கடமை போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. "இன்றைய உலகில் திருச்சபை" என்ற மறைக் கொள்கைத் திரட்டு இத்தகைய சிந்தனைகளின் வெளிப்பாடேயாகும்.

இத்தகைய மாற்றங்களைக் கோரிநின்ற இயக்கங்களுக்கு தூணாய் துணைநின்ற இறையியலாளர்கள் பலர். இவெஸ் கொங்கார், கார்ல்ர்ரான எட்வேட் சிலபெக்ஸ், கென்றி டி லூபக், கான்ஸ் குங் போன்றவர்கள் இவர்களுள் முக்கியமானவர்கள்.

திருத்தந்தை 23ம் யோவான் அவர்கள் இத்தகைய புதிய சிந்தனை போக்குகளுக்கு திருச்சபையின் கதவுகளைத் திறந்துவிட்டபோது, பழையதும், புதியதும் மோதிக்கொண்டன. தீவிரங்கள் சீர்செய்யப்பட்டன சமரசங்கள் ஏற்பட்டன.

ஆதியில் நீரின்மீது அசைவாடிய புதுப்பிறப்பின் ஆவியானவர் இச்சங்கத்தின் உள்ளும் புறமும் அசைந்தாடினார். இதன்விளைவு புதிய மிலேனியத்தில் திருச்சபை பயணிக்கவேண்டிய பல புதிய திசைகள் இறைசித்தத்தால் வடிவமைக்கப்பட்டன.

மொத்தம் பதினாறு ஏடுகளில் பலவிதமான கருத்துக்கள் நடுநிலை தவறாத வழிகாட்டல்கள் அடங்கிய திருச்சபையின் திசைகாட்டல் தொகுப்பொன்று உருவானது.

திருவிவிலியத்திற்கு மட்டுமே அடுத்ததாகிய அதிகார வலுக்கொண்ட நூல்தொகுப்பொன்று பிரசவமானது. அவ்வேடுகள் தரும் திசைகளையும் விசைகளையும் மீட்டிப்பார்ப்பது சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவில் மிகவும் பொருத்தமாக அமையும்.

## புனித வின்சென்ற் டி போலும் ...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சகவளாகத்தில் அமைந்திருந்த தூய சூசையப்பர் சிற்றாலயத்தில் முதல் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். அதனை தொடர்ந்து இரண்டாவது பந்தி நாவாந்துறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**யாழ் மறைமாவட்டத்தில்**

தற்போது யாழ் மறைமாவட்டத்தில் 22பந்திகள் வெவ்வேறு பங்குகளில் சிறப்பாக பணியாற்றி வருகின்றன. இச்சபைகள் பங்குத்தந்தைக்கு வலது கரமாக இருந்து பணியாற்றுவதோடு திருச்சபையின் முதன்மை பணிகளில் ஒன்றான துயர் துடைப்புப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து ஆன்மீக பிறரன்பு பணிகளை சிறப்பாக ஆற்றி வருகின்றனர். அனாதைகள், விதவைகள், கைவிடப்பட்டோர், நோயாளர், முதியோர் போரில் கரிசனையும் அக்கறையும் கொண்டு அவர்களின் தேவைகளை நிறைவு செய்து வாழ்வாதாரத்திற்கு பக்கபலமாய் இருக்கின்றனர். அத்துடன் கல்விக்கு முன்னுரிமை கொடுத்து வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பல்வேறு வழிகளிலும் உதவி செய்து வருகின்றனர். ஆன்மீக வாழ்வில் நாட்டமின்றி இருப்போரையும், ஆன்மீக வாழ்வை தொலைத்தோரையும் மீண்டும் இறைவனுக்குள் கொண்டு வரும் ஆன்மீக பணிகளையும், மற்றும் ஞானக்கடமை செய்யாதோரை தூண்டுவதும் இச்சபையின் சிறப்பான பணிகளாகும்.

**முடிவாக**

தூய வின்சென்ற் டி போலின் பிறரன்பு பணிக்கான கனவும், அருளாளர் பிரெட்றிக் ஓசானம் அவர்களின் துயர் துடைப்பு பணிகளின் ஆர்வமும் எமது கத்தோலிக்க திருச்சபையின் பணிகளின் ஊடாக வளரவேண்டும் என்று மன்றாடுவோம். எமது மறைமாவட்டத்தில் புதிதாக தூய வின்சென்ற் டி போல் சபைகள் ஆரம்பிக்கப்படவும் பொதுநிலையினருக்கான உன்னதமான பங்கேற்கும் அமைப்பு இச்சபை என்பதை நாம் ஏற்றுக் கொண்டு அதில் இணைந்து பணிபுரிய முன்வருவோமாக.

**இ. அ. அமலரட்ணம்**
**தலைவர் – மத்தியசபை**

# மறைக்கல்வி தினம் புரட்டாதி 30 - 2012



## இயக்குநர் இதயத்திலிருந்து...

மறைக்கல்வி என்பது, பிறப்பு முதல், இறப்பு வரை தொடர வேண்டிய ஒரு முயற்சியும், பயிற்சியுமாகும். அந்த வகையில், எமது தமிழ் பேசும் மறை மாவட்டங்கள் அனைத்தும். இணைந்து இந்த ஆண்டை மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனம் செய்து, **"எல்லோருக்கும் மறைக் கல்வி"** என்ற விருது வாக்குடன் ஆரம்பித்து பங்குத்தளங்கள் தோறும், வகுப்புக்கள், வழிபாட்டு முறைகள், மறைஉரைகள், பயிற்சிப்பாசறைகள் எனத்தொடங்கி வைக்கப்பட்டு அது மறைக்கோட்ட ரீதியில் போட்டிகள், கருத்தமர்வுகள், கண்காட்சிகள், கலைநிகழ்வுகள் என பலவாக்கப்பட்டு இறுதியில் மறைமாவட்ட ரீதியாக, ஒன்றுகூடல்கள், மறைக்கல்வி பேராசிரியர்கள், தலைமையில், கருத்தமர்வுகள், வதிவிடப் பயிற்சிகள், தமிழ் நாட்டில் இருந்து வருகை பேரான்கள் தலைமையில் மடுத்திருப்பதியில் அனைவரையும் இணைத்து கருத்துப் பகிர்வுகள், கலைநிகழ்வுகள், போட்டிகள் நடாத்தப்பட்டு, இன்னும் சிந்தனை தரும் கட்டுரைகளை பத்திரிகைகளில் வெளியிட்டு "எல்லோருக்கும் மறைக்கல்வி" என்ற கருத்தூட்டல்களை நிறைவாகச் செய்து நின்ற அருட்தந்தையர்கள், துறவற சபைச்சகோதரிகள், பங்குகளில் பணியாற்றும் மறையாசிரியர்கள், இதற்குத் துணையாக நின்று தோள்கொடுத்த அனைவரையும் மறைக்கல்வி நிலையத்தின் சார்பாக, பாராட்டி நிற்கின்றேன்.

பங்கு, மறைக்கோட்டம், மறைமாவட்டம் என்றும் **"மறைக்கல்வி மன்றங்கள்"** அமைத்து மறைக்கல்விப் பணியை ஒரு மக்கள் இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல, உதவிக்கரம் கொடுத்து நிற்கும் அருட்தந்தையர்களையும் அவர்களது பணியை இலகுவாக்க அவர்களுக்கு பக்க துணையாக இன்று செயற்படும் ஊக்குவிப்பாளர்களையும் எமது மறைக்கல்வி நடுநிலையம் நினைவில் வைத்துப் போற்றுகின்றது.

தனி மனித கிறிஸ்தவ வாழ்வுக்கு மட்டுமல்ல கிறிஸ்தவ சமூகங்களின் வாழ்வுக்கும், பொழிவுக்கும் ஆற்றல் மிகு செயற்பாட்டிற்கும் மறைக்கல்வி இன்றியமையாதது. கிறிஸ்துவின் விழுமியங்களின் நெறியில் அவை வாழவும் வளரவும் அவரது இலட்சியமாகிய இறையரசின் பணியை இன்று மாறிவரும் சூழலுக்கு ஏறப நல்ல கிறிஸ்தவர்களை உருவாக்கி உன்னதமான நல் கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்க மறைக்கல்வி அவசியமானதொன்றாக விளங்கின்றது. மறைக்கல்வியை கற்று வாழ்ந்து கிறிஸ்துவை அறிந்து கிறிஸ்துவை அறிவிப்போம். இதனால்தான் இருபது ஆண்டுகள் ஒரு பங்கில் மறைக்கல்வி தரப்படவில்லையென்றால் அங்கு கிறிஸ்தவம் இல்லாமலே போய்விடும் என்றார். ***புனித ஜோண் மரிய வியான்னி***

மறைக்கல்வி என்பது ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்கு உட்பட்டது ஒன்றல்ல, அது நித்திய வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும் ஏணிப்படி மனித வாழ்வு கருவறை தொடங்கி கல்லறை வரை அடங்கிப்போகும் வாழ்வல்ல அதற்கும் அப்பால் நித்திய வாழ்வு ( முடிவில்லாத வாழ்வு ) வரை நம்மை நகர்த்திச்செல்லும் முடிவற்ற பயணமாகும், இதுவே கத்தோலிக்கராகிய எமது விசுவாசப்பயணம். இந்தப் பயணத்தில் நாம் முன்னேறிச் செல்ல உங்கள் அனைவரையும் அன்போடு அழைத்து நிற்கின்றோம். மறைக்கல்வி வாரத்தை அர்த்தமுள்ளதாக்க ஒவ்வொரு பங்கிலும் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடுசெய்து இறையரசைப் பரப்பும் கருவிகளாக, இயேசுவின் சாட்சிகளாக எல்லோரும் மாற பங்குத்தந்தையர்கள் ஊடாக அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம். விசுவாசப்பயணத்தில் வீரமுடன் கால் பதிப்போம்.

**அன்புடன்**

**அருள்பணியாளர் அன்ரன் ஜோர்ஜ்**
**இயக்குநர் - மறைக்கல்வி நடுநிலையம்**
**ஆயர் இல்லம் - யாழ்ப்பாணம்.**

## மறையாசிரியரும் மறைக்கல்வியும்

**இ. ம. ஜெயசீலன்**

எல்லோர்க்கும் மறைக்கல்வி எனற தொனியுடன் மறைக்கல்வி ஆண்டு நடைபெற்று முடிவுறவுள்ளது. மறை அறிவிக்கும் பணி என்பது கடினமான இயலாத ஒன்று என்று அனைவரும் நினைக்கிறோம். மறை அறிவிப்புப்பணி என்பது நாம் கண்டதையும் கேட்டதையும் அனுபவித்ததையும் பிறருக்குச் சொல்வது தான் மறை அறிவிப்புப்பணி.

தம் ஒரே மகன் மீது நம்பிக்கைகொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் *(யோவா. 3:16)* இது தான் நற்செய்தி இதைப் பிறருக்கு அறிவிப்பது தான் மறை அறிவிக்கும் பணி. திருவிவிலியத்தில் இடையருக்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி அறிவித்தபின் அவர்கள் பெத்தலகேம் சென்று குழந்தையைக் கண்டார்கள். பின் அக்குழந்தையைப் பற்றி பிறருக்கு அறிவித்தார்கள்.

திருமுழுக்கு பெற்ற ஒவவொரு கிறிஸ்தவனும் நற்செய்தி அறிவிக்க வேண்டும். இது நம்மேல் சுமத்தப்பட்ட கடமை. இன்றும் சிறப்பாக மறையாசிரியர்களாய் அழைக்கப்பட்டவர்கள் இதனைத் தலையாக கடமையாகக் கொண்டு செயல்பட வேணடியவர்கள் மறையாசிரியர்கள். தனது விசுவாசத்தை ஆழப்படுத்தி, திருவிவிலியத்தை வாசித்து ஆள் மனதில் தியானித்து செபிப்பதினால் சக்தி பெற்று விசுவாசத்தில் தொடர் வளர்ச்சிபெற வேண்டும். மறையாசிரியர் தனது மறைக்கல்விப் பணியை ஆசையுடனும் ஆர்வத்துடனும் ஆற்ற வேண்டும். தம்மிடம் ஒப்படைக்கபபட்ட பிள்ளைகளின் விசுவாச வளர்ச்சியில் அக்கறையுடையவர்களாய் பணியாற்ற வேண்டும். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் கடவுள் தன்னிடம் தந்த மாணிக்கங்கள் என்பதை உணர்ந்து அவர்களை அறிந்து அன்பு செய்து இயேசுவை அவர்கள் சந்திக்கசெய்ய வேண்டும்.

திருவிவிலியம் மறைக்கல்வியின் மையமாகும். இறைவார்த்தையின்றி மறைக்கல்வி இல்லை."திருவிவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன் என்று புனித எரோனிமுஸ் கூறுகின்றார்." ஆகவே திருவிவிலியத்தை படிப்பதால் இயேசு யார் என்பதை அறியமுடியும். எம்மாவுஸ் நிகழ்வில் இயேசு பயணம் செய்த இரு சீடர்களுடன் உரையாடுவது ஒரு மறைக்கல்வி. *(லூக் 24: 13-38)* இங்கு இயேசுவின் போதனா முறையை நாம் காண்கிறோம். இயேசு அவர்களுடன் நடந்து கேட்டு, உரையாடி விளககி, உண்டு மறைக்கல்வியை போதிததார். இதுதான் மனித மையப் போதனாமுறை. இங்கு இறைவார்த்தையின் விளக்கம். இயேசுவால் மட்டுமே கொடுக்கக் கூடியதாகவுள்ளது. எனவே மறையாசிரியர்கள் இயேசுவுடன் பயணித்து அவரை அனுபவித்து வாழ்ந்து பிள்ளைகளுக்கு இறைவார்தைத ஒளியில் இயேசுவை அனுபவிக்க வழிகாட்ட வேண்டும்.

## மறைக்கல்வி வழியாக, விசுவாசப் பயணத்துக்கு

**எஸ். ஏ. நாதர்**



**முன்னுரை:**

மறைக்கல்வி ஆண்டில், "எல்லோருக்கும் மறைக்கல்வி" என்று கருப்பொருளோடு, இந்த ஆண்டு முழுவதும், அனைத்துத் தரப்பினருடனும் உரையாடி, உறவாடி, இயேசு முன்னறிவித்த "காலம் நிறைவேறி விட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" *(மாற் 1:15)* என்ற முழக்கத்தோடு, பயணித்தோம். நாம் சந்தித்த ஏழைகள், எளியவர்கள், கைவிடபபட்டோர், போரினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமாக்கபபட்டோர், விதவைகள், அனாதைச் சிறுவர்கள், ஏதிலிகளாக வீடுவாசல்களை இழந்தவர்கள் அனைவர் மத்தியிலும், இயேசு தொழுகைக் கூடத்தில் முழக்கமிட்டு அறிவித்த *(லூக் 4: 18-19)* நற்செய்தியின் படி எம்மாலான திருத்தூதுப் பணியை செய்துமுடித்து, அதிலே ஒரு நிறைவையும் கண்டு, இந்த மறைக்கல்வி ஆண்டுக்கு விடைகொடுக்க தயாராக உள்ளோம். இதனால் எமது கடமை முடிந்துவிட்டது என்ற மனப்பான்மையில் அனேகர் உள்ளனர்.

**மறைக்கல்வி வாரமும் அதன் செயற்பாடுகளும்:**

மறைக்கல்வி வாரம் என்றால், பங்குகள் தோறும் ஒரு கொண்டாட்டாத் திருவிழா, அதிலும் சிறுவர்களுக்கு ஒரு போட்டிப் பெருவிழா, மறைக்கல்வி வகுப்புக்களுக்கு ஒழுங்காக வந்தவர்கள், போட்டிப் பரீட்சைகளில் வெற்றியீட்டியவர்கள், திருப்பலியில் கூடுதலாகப் பங்கேற்றவர்கள், குறிப்பிட்ட செபங்களைப் பாடமாக்கியவர்கள், சிரமதானப் பணிகளில் ஈடுபட்டவர்கள் என ஒரு நீண்ட பட்டியலிட்டு, அவர்களைப் பங்குத்தந்தை தலைமையில் கௌரவித்து, பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்குவதோடு, அனைவரையும் மகிழ்விக்க இறுதிநாளில ஒரு திறந்த வெளியரங்கில், ஒரு கண்காட்சியையும், கலை நிகழ்வையும் நடத்தி முடிப்பதோடு, எமது மறைக்கல்வி வாரம் நிறைவு பெற்றுவருவது இன்றைய நடைமுறை. இவையனைத்தும் தேவையற்றதொன்று எனக்கருதப் பட முடியாது விட்டாலும், இவையனைத்துக்கும் மேலாக, மறைக்கல்வி ஒரு தொடர் நிகழ்வு. அது குறிப்பிட்ட ஒரு காலத்துக்குகோ, தனிப்பட்ட ஒரு தரப்பினருக்கோ உரித்தான தொன்றல்ல, அது ஒரு நீண்டகால விசுவாசப் பயணம் என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டிய தொன்றாகும்.

**விசுவாசப் பயணத்தில் காலடி பதிப்போம்:**

"உயிர் இல்லாத உடல்போல, செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே" *(யாக் 2:26)* என்கிறார் திருத்தூதர் யாக்கோபு மறைக்கல்வி, நமக்கு விசுவாச உண்மைகளையும், அடிப்படை மறை உண்மைகளையும் கற்றுத் தருகின்றது. ஆனால், அவைகளைக் கற்றதோடு மட்டும் எமது கடமை முடிந்துவிடுகின்றது என்பது பலரது அபிப்பிராயம். இயேசு தனது மூன்று வருடப் பணிவாழ்வில் மறைக்கல்விப் பணியைத் தொடக்கி வைத்து, அதன் விரிவாக்கப்பணியை, தனது திருத்தூதர்களிடம் ஒப்படைத்து "விண்ணுலகிலும், மண்ணுலகிலும் அனைத்து அதிகாரங்களும் எனக்கு அருளப்பட்டிருக்கின்றது. எனவே நீங்கள் போய், எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால், திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும், அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ, உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" *(மத் 28:18-20)* என்றுகூறி, நற்செய்தி அறிவிப்பு ஒரு தொடர் பயணம் எனபதோடு, இயேசு நம்நடுவில் என்றும் உயிரோடு பிரசன்னமாக இருக்கின்றார் என்ற விசுவாசப் பயணத்தை நினைவூட்டுகின்றார். மறைக்கல்வி வழியாக, விசுவாசத்தை வாழ்வாக்குவோம்.

மறைக்கல்வி, விசுவாசப் பயணத்துக்கு அடித்தளம். மறைக்கல்வி என்பது தாய்ப்பாலுக்கு ஒப்பானதாகும். தாய்ப்பாலில் வீரியமடைந்த குழந்தை, அதனால் திடம் பெற்று, நோய் எதிர்ப்புச் சக்திகளை உள்வாங்கி, ஒரு திடம்பெற்ற வலுவை மேற்கொண்டு, எதிர்காலத்தில் நல்ல ஆரோக்கியமுள்ளவனாக வலுப்பெறுகிறான். அதேபோல, எமது விசுவாச வாழ்விறகு மறைக்கல்வியே ஆணிவேரும், அடித்தளமுமாக அமைகின்றது. "ஆண்டவர் எத்துணை இனியவர்" என்பது மறைக் கல்வியால் நாம் கற்றுக்கொண்ட பாடம். அந்த ஆண்டவரின "இனிமையை" சுவைத்துப் பார்க்க *(தி.பா 34:8)* அதனால் அவர்கள், இறைவனிடம் அடைக்கலம் புகுந்து பேறுபெற்றோர் எனப் பாராட்டப்படுவதற்கும், தொடர்ந்து நாம் மேற்கொள்ளும் விசுவாசப் பயணமே எமது நித்திய வாழ்வுக்கு வழி சமைக்கும்

**நிறைவாக:**

மறைக்கல்வி ஆண்டை நிறைவு செய்து, விசுவாச ஆண்டில் காலடி பதிக்க முனைந்து கொண்டிருக்கும் நாம், மறைக்கல்வி கற்றுத்தரும் விசுவாச மறை உண்மைகளை ஆழமாக மனதிலிருத்தி திருச்சபை வலியுறுத்தும் பன்னிரு விசுவாச சத்தியங்களை (உண்மைகளை) ஒரே இறைவனை முழுமையாக ஏற்றுக்கொண்டு, படிப்படியாக உயர்ந்து, நித்திய வாழ்வை நோக்கி எமது வாழ்வை நகர்த்திச் செல்ல, தொடர்ந்து வரும் பன்னிரண்டு மாதங்களிலும், எம்மையும், எம்மிடம் மறைக்கல்வி கற்றுவரும் மாணவர்களையும் உயர்த்தி நிற்கும் ஏணிப் படிகளாக மாற்றுவோம் - மாறுவோம்.

# மேய்ப்புப்பணிப் பேரவைகளுக்கான விதிகள்

## ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை

**01. அமைப்பின் பெயர்**

இது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை என அழைக்கப்படும்.

**02. பேரவையின் இயல்பு**

2.1 பங்குத்தந்தையின் தலைமையில், பணித் தகுதியின் அடிப்படையில் உள்ளவர்களும், ஆலய மேய்ப்புப்பணிப் பேரவைகளின் பிரதிநிதிகளும், பங்குத் தந்தையின் நியமன உறுப்பினரும் ஒருங்கிணைந்து, அப்பங்கு மக்கள் கிறிஸ்தவ வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் செழித்தோங்க திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும் குழுவே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை.

2.2 இது திருச்சபைச் சட்டங்களுக்கும், ஆயரின் அறிவுறுத்தல்களுக்கும் உட்பட்டு, பங்குத் தந்தையருடன் இணைந்து. கலந்துரையாடி, பங்குத் திருச்சபையின் பொதுநலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, சகோதர உறவுடன் தீர்மானங்களை எடுப்பதற்கும் அத்தீர்மானங்களை நடைமுறைபடுத்துவதற்குமான ஒரு பேரவையாகும்.

**03. நோக்கங்களும் பணிகளும்**

3.1 பங்கு மக்களை விசுவாச வாழ்வு, செபவாழ்வு, அன்புறவுடனான பகிர்தல் வாழ்வு, மன்னித்தல் வாழ்வு, நீதி, சமாதான வாழ்வு ஆகியவற்றில் வளர்த்து, குடும்ப உணர்வோடு வாழ அவர்களைப் பயிற்றுவித்தல்.

3.2 பங்கில் இயங்கி வரும் பக்தி சபைகள், அமைப்புக்கள் ஆகியவற்றின் தனித்துவத்தை மதித்து, அதேவேளை பொதுநன்மை கருதி அவற்றிடையே நல்லுறவையும் ஒற்றுமையையும் வளர்த்தல்.

3.3 பங்கில் அன்பியங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.

3.4 பங்கின் அனைத்து முன்னெடுப்புக்களையும் ஒருங்கிணைத்தல்.

3.5 பங்கின் தேவைகளுக்கு ஏற்ப நீண்ட கால, குறுகிய காலத் திட்டங்களை வகுத்துச் செயற்படல்.

3.6 மறைமாவட்ட ஆயர் தரும் ஆலோசனைகளையும், தீர்மானங்களையும் செயற்படுத்தல்.

3.7 பங்கு மட்டத்தில் நிகழும் விழாக்கள், நிகழ்ச்சிகள் என்பவற்றை திட்டமிட்டு, மக்களின் ஒத்துழைப்புடன், அவர்களின் வளர்ச்சிக்குப் பயனளிக்கும் விதத்தில் நடத்துதல்.

3.8 பங்கின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் பங்குத் தந்தையுடன் இணைந்து செயற்படல்.

3.9 கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளான புனிதப் படுத்துதல், போதித்தல், வழிநடத்துதல் ஆகியவறறில் மக்கள் அனைவரும் பங்கு பற்றிச் செயற்பட கூட்டங்கள், கருத்தரங்குகள், பயிற்சிகள் போன்றவறறை ஏற்பாடு செய்தல்.

3.10 பங்குப் பேரவையின் செயற்பாடுகளுக்கென பங்குப் பேரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் ஒரு தொகை நிதியை ஆலய திருச்சபைகளிலிருந்து ஆலய மேய்ப்புபபணிப் பேரவையூடாக வருடாந்தம் பெற்றுக் கொள்ளல்.

**04. அங்கத்துவம்**

பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் உறுப்பினர்கள் பங்கின் எல்லா நிலையிலும் உள்ள ஆண்களையும் பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பின்வரும் மூன்று அடிப்படையில் தகுதி பெறுவர்.

**4.1 பணித்தகுதி அடிப்படையில்**

4.1.1 பங்குத்தந்தை
4.1.2 உதவிப்பங்குத்தந்தை
4.1.3 திருத்தொண்டர்
4.1.4 முழுநேர மறையாசிரியர்
4.1.5 பங்கிலுள்ள துறவற இல்லங்களின் பிரதிநிதிகள்

4.1.6 பங்கு மட்டத்தில் பங்குத்தந்தையின் வழிகாட்டலில் இயங்கும் அமைப்புக்கள், சபைகளின் இரு பிரதிநிதிகள்.

**4.2 ஆலய மேய்ப்புப்பணி பேரவையின் பிரதிநித்துவ அடிப்படையில்**

4.2.1 பங்கிலுள்ள ஒவ்வொரு ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையின் செயலாளர், பொருளாளர், பணிக் குழுக்களின் தொடர்பாளர்கள் ஆகியோர் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் தமது ஆலயத்திருச்சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவர்.

**4.3 நியமன அடிப்படையில்**

4.3.1 ஒரு சில துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களும் ஆலய மேய்ப்புப்பணிப் பேரவைகளில் பிரதிநித்துவ அடிப்படையில் போதிய பிரதிநிதித்துவம் பெறாதவர்களும், பங்குத்தந்தையால் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். (*உ-ம்:* பெண்கள், இளைஞர், பாதிக்கப்பட்டோர்)

4.3.2 பணித் தகுதியின் அடிப்படையிலும், நியமன அடிப்படையிலும் உறுப்பினராக்கப்படுபவர்களின் கூட்டு எண்ணிக்கை பேரவையின் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குக் கூடுதலாக இருத்தலாகாது.

4.3.3 பேரவையின் மொத்த எண்ணிக்கையை பேரவை தீர்மானிக்கும்.

**05. உறுப்பினரின் பணிக்காலம்**

5.1 பேரவை உறுப்பினரின் பணிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

5.2 ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையில் பணியைத் துறக்கும் ஒருவர் பங்கு மேய்பபுப்பணிப் பேரவையிலும் பணியை இழக்கிறார். ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையில் அப்பணிக்கு நியமிக்கப்படுவர் இயல்பாகவே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையிலும் அங்கத்துவம் பெறுகிறார்.

**06. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் கூட்டம்**

6.1 பங்குத் தந்தையே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் தலைவர்.

6.2 முறையான பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைப் பொதுக்கூட்டத்திற்கு உறுப்பினர்களின் முழுத்தொகையில் குறைந்த பட்சம் அரைப்பங்கினராவது வருகை தந்திருத்தல் அவசியம்.

6.3 பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் கூட்டம் குறைந்தது நான்கு மாதத்திற்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும்.

6.4 அவசரக் கூட்டமாயின், அதை தலைவர் மட்டுமே கூட்டலாம். அதற்கு குறைந்தது ஒரு நாளுக்கு முன்னதாகவே உறுபபினர்களுக்கு அறிவிக்க வேணடும்.

6.5 உறுப்பினரில் மூன்றில் ஒரு பங்கினருடைய எழுத்து மூலமான வேண்டுகோளுக்கிணங்க, பங்கு மேய்பபுப்பணியின் விசேட கூட்டம் நடைபெற வேண்டும.

6.6 ஒவ்வொரு கூட்டத்திலும் தலைவரின் பிரசன்னம் அவசியமானது.

**07. செயற்குழு**

7.1 பேரவை சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் பின்வரும் பணிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்யும். செயலர், உபசெயலர், பொருளாளர், பங்கு மட்டத்தில் இணைந்து இயங்கக்கூடிய பணிக குழுக்களின் தொடர்பாளர்கள். (*உ- ம் :* நற்செய்திக குழு, நற்பணிக்குழு.)

7.2 மேற்சொன்ன தெரிவுகளின் போது செயற்குழுவில் பிரதிநிதித்துவம் பெறாத ஆலய மேய்ப்புப்பணிப் பேரவைகளின் சார்பில் தலா ஒருவர் செயற்குழுவுக்கு தெரிவு செய்யப்படுவார்.

7.3 பங்குத் தந்தையின் தலைமையில் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை கூடும் செயற்குழு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்.

(தொடரும்)

# திருச்சபையின் தந்தை ஓரிஜென் (Origen) (185-254) – புதிதாக வெளிச்சத்துக்கு வரும் தகவல்கள்

அருட்பணி. S.V.B. மங்களராஜா

திருச்சபைத் தந்தையர்களுள் முக்கியமானவர்களுள் ஒருவர் எகிப்திய நகராகிய அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த ஓரிஜென் எனபவர். இவர் ஒரு சிறந்த இறையியலாளர், மெய்யியல் அறிஞர், திருவிவிலிய விற்பன்னர், மறையுரைஞர், இறையியல் எழுத்தாளர். இவர் ஆரம்பத்திலிருந்தே கடும் தவ வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டிருந்தார். தமது தந்தை புனித லியோனிடாஸ் மறை சாட்சியானது போலத் தானும் மறை சாட்சியாக விரும்பினார்.

இவரது எழுத்தாக்கங்கள் ஏராளம். இதனால் தான் திருவிவிலிய விற்பன்னராகிய புனித எரோணிமுஸ் இவரது படைப்புக்கள் பற்றிக்குறிப்பிடும் போது அவர் எழுதிய நூல்கள் அத்தனையையும் யாரால் தான் படித்து முடிக்க முடியும் எனக்குறிப்பிடுகின்றார். எனினும் இவரது படைப்புக்கள் எல்லாம் திருச்சபையின் கைவசம் இல்லை.

இவரது திருவிவிலியம் தொடர்பான ஆக்கங்களில் பழைய, புதிய ஏற்பாட்டின் விளக்கவுரைகள், ஆறு வடிவ (மூல)த் திருவிவிலியம் (Hexapla) (இதனைப் பெருமளவில் புனித எரோணிமுஸ் (342 - 420) மூல நூல்களிலிருந்து லத்தீனின் மொழி பெயர்க்கப்பட்டு வல்கேற் (Balgate) என்று பாமரரும் படிக்கக் கூடியவாறு எழுதுவதற்குப் பயன்படுத்தினார். இந்த 'வல்கேற்' தான் கத்தோலிக்க திருச் சபையால் பாவனைக் கென்று ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது) ஆகியவை முக்கியமானவை. அடுத்து இவர் எழுதிய இறையியல் பற்றிய ஏறக்குறைய முழுமையான தொகுப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் பரிசுத்த திரித்துவம் பற்றியும், இவ்வுலகையும் மனிதனையும் பற்றியும், ஒழுக்கவியலின் அடித்தளங்கள் பற்றியும் மற்றும் திருவிவிலியத்தின் இறையூக்கம் பற்றியதுமாக ஒரு விளக்கமான பல நூல்களைக் கொண்ட தொகுப்பாக இது அமைந்துள்ளது.

**சர்ச்சைகளுள் சிக்கிய ஓரிஜென்**

இவரது படைப்புக்கள் பல 'காணாமல் போனமைக்கும்'' அவற்றைக் கண்டுபிடிக்கப் போதிய ஆர்வம் காட்டப்படாமல் இருந்தமைக்கான காரணம் இவர் சில விடயங்களில் அதிதீவிர கடும் போக்கைக் கடைப்பிடித்தமையும் இவரது கருத்துக்களிலிருந்து தோற்றம் பெற்ற சில தவறான படிப்பினைகளுமாகும். இதனால் 553ம் ஆண்டு கொன்ஸ்தாந்தி நோப்பிள் நகரில் இடம்பெற்ற பொதுச் சங்கத்தில் இக்கோட்பாடுகள் கண்டனத்திற்குள்ளாயின.

**புதிய கண்டு பிடிப்புக்கள்**

யதார்த்த நிலையென்னவென்றால் இவரது அதிதீவிர கருத்துக்களால் உருவான தவறான படிப்பினைகள் மத்தியிலும் இவர் திருச்சபையின் திருவிவிலிய ஆராய்ச்சிக்கும் இறையியல் கோட்பாடுகளுக்கும் வழங்கிய பங்களிப்பு காத்திரமானதாகவே இருந்துவந்துள்ளது. தற்போது திருச்சபையின் தந்தையருக்குரியதற்கு (Patrology) லுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும்போது ஓரிஜென் உடைய பஙகளிப்புக்களும் முக்கியத்துவம் பெறுகின்றது மிகச்சிறந்த இறையியலாளரும் திருச்சபையைக் கோட்பாட்டியல் ஆசிரியருமாகிய தற்போதைய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் வழமையாக புதன் கிழமைகளில் வழங்கும் மறையறிவை வளர்க்கும் உரைகளின் வரிசையில் 2007ம் 2008ம் ஆண்டுகளில் வழங்கிய உரைகள திருச்சபையின் தந்தையர்களை மையமாகக்கொண்டு வழங்கப்பட்டவையாகும். புனிதர்களான அகஸ்ரின், அம்புறோஸ், ஜோன் கிறிகோஸ்ரோம் போன்றவர்கள் மட்டுமல்ல பல்வேறு சர்ச்சைகளுக்குள்ளாயிருந்த டேர்டுல்லியன், ஓரிஜென் போன்ற தந்தையர்களும் திருத்தந்தையின் உரைகளில் இடம் பெற்றுள்ளனர். குறிப்பாக ஓரிஜென் பற்றிய உரைகள் இரண்டு வாரங்கள் தொடராக இடம் பெற்றுள்ளன.

இந்தப் பின்னணியில் ஜேர்மனியில் உள்ள மியூனிச் நகரில உள்ள ஒரு நூலகத்தில் இதுவரையில் வெளிச்சத்திற்கு வராதிருந்த ஓரிஜெனுடைய சில படைப்புக்கள் வெளிக்கொணரப்பட்டன. இத்தாலிய ஆராய்ச்சியாளராகிய மரீனா மொலின் பிராடென் எனும பெண் இந் நூலகத்திலுள்ள பழமை வாய்ந்த ஏடுகளைப் பட்டியலிடும் பணியிலீடுபட்டுக் கொணடிருந்தபோது சந்தேகத்திற்கிடமின்றி ஓரிஜெனுடையது என இனம் காணப்பட்ட ஒரு தொகுதி ஏடுகள் இவரது கணகளிற்பட்டது.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



## 2ம் ஆண்டு நினைவு

அன்னை மடியில் 09-04-1927

ஆண்டவன் அடியில் 21-09-2010

ஐயா!

வாழ்வில் உங்களுடனான

இனிய பொழுதுகள்

எம் கண்முன்னே நிற்கின்றன

அன்புத் தந்தையே! உமது திருவுளப்படி வாழ்ந்து உமதண்டை வந்த உம்மடியானுடைய குற்றங்களை மன்னித்து நித்திய பேரின்ப வீட்டின் கதவுகளை திறந்தருளும். ஆமென்

அமரர்: பேதுருப்பிள்ளை கிறகோரி

4ம் வட்டாரம் மண்டைதீவு.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Add-83/12

## விண்ணக வாழ்வின்

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி. எட்வேட் அருளம்மா

தாயின் மடியில் 17-07-1921

இறைவனடியில் 27-09-2002

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்." *யோவான் 11:25*

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாக வாழ்வாங்கு வாழவைத்த அம்மாவே! பத்து ஆண்டுகள் ஆயினும் உம்மை நினைக்காத நாளில்லை. மீண்டும் ஒருமுறை பிறப்பினும் நிந்தன் பிள்ளைகளாய் வாழ வேண்டுதல் பல செய்கின்றோம்.

*உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**27-09-2012 வியாழக்கிழமை காலை 6மணிக்கு பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

54/6, B கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு - யாழ்ப்பாணம்.

அன்பிற்குரிய குடும்பத்தினர்.

Add: 87/12

## திருச்சபையின் தந்தை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாடல் 36ல் மையமாகக் கொண்டு அமைந்த மறையுரைகள் 5ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அக்குவிலேயா நகரத்து துருபினோ (Rutina & Aquileia) என்பவரால் லத்தீனில் மொழி பெயர்க்கப் பட்டிருந்தன. இவை ஏற்கெனவே கைவசம் உள்ளன. இவற்றுடன் தற்போது புதிதாக வெளிக் கொணரப்பட்ட ஏடுகளை ஒப்பிட்டுப் பார்த்துத் தான் இவை ஒரிஜெனுடையவை என்ற முடிவுக்கு மாணா வந்துள்ளார்.

### இந்தக் கண்டுபிடிப்பின் முக்கியத்துவம்

❖ ஆதித்திருச்சபையில் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின் மறையுரையாற்றும் பாரம்பரியம் யூதர்களுடைய வழிபாட்டுத் தலங்களில் இடம் பெறும் (Synagogal worship) வழிபாடுகளில் மறையுரை இடம் பெறும் பாரம்பரியத்திலிருந்து பெறப்பட்டது. எனினும் இது வரையில் பூதவழி பாட்டுத்தல மறையுரைகள் அல்லது ஆதித்திருச் சபையின் வழிபாட்டு மறையுரைகள் அல்லது எதுவும் முழுமையாக எமக்குக் கிடைத்திருக்கவில்லை.

❖ இந்தப்பின்னணியில் தற்போது வெளிச்சத்திறகுக் கொணரப்பட்டுள்ள ஒரிஜெனுடைய மறையுரைகள் தாம் மிகப் பழமை வாய்ந்த எதுவித மாற்றத்திற்கும் உட்படாத முழுமையான மறையுரைத் தொகுப்பு எனலாம்.

❖ இம்மறையுரைகள் இடம் பெற்ற காலம் இவர் அலெக் சாந்திரிய திருச்சபையால் தள்ளிவைக்கப்பட்டு பலஸ் தீனாவிலுள்ள செசரேயாவில் ஒரு குருவாக இருந்த போது என்றும் திருச்சபை வரலாற் றாசிரியர் செரேயா நகரைச் சேர்ந்த எயூசே பியுஸ் குறிப் பிடுவது போல ஏறக்குறைய 245 ஆண்டளவில் ஒரிஜெனுக்கு 60வயது நடந்தபோது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

❖ ஒரிஜென் மறையுரை யாற்றும் வேளைகளில் குறிப் பெடுப்பவர்கள் தனது மறை யுரைகளைக் குறிப்பெடுக்க இவர் ஏற்பாடுகள் செய்திருந் தமையால் பிற்காலத்தில் இம் மறையுரைகள் பலவேறிடங் களுக்கும் எடுத்துச் செல்லப் படக் கூடியதாயிருந்தது.

❖ இம்மறை ரைகளையாற்று வதற்குப் பல வருடங்கள் முன்னதாக ஒரி ஜென் தமது பிரசித்தி பெற்ற மறைக்கல்விச் சாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இவர் விவிலியத்தின் பல நூல்களை மொழி பெயர்த் ததுடன் பல விளக்கமான விவிலிய விளக்க வுரை நூல்களையும் வெளியிட்டிருந்தர். இவ்வாறாக இம்மறையுரைகளையாற்றிய இக்காலம் இவரது நீண்ட திருவிவிலியத்திற்கு விளக்கவுரை வழங்கும் பணியின் இறுதிக் காலமாகும்.

❖ அக்காலத்தில் வழக்கிலிருந்து இலக்கிய வடிவங்களுக்கேற்பவும், மெய்யியல் தரவுகளுக்கொப்பவும் இவரது விவிலிய விளக்கவுரைகளும் அமைந்திருந்தன. இதன்படி திருவிவிலியம் பல்வேறு தலைப்புக்களாக வகுக் கப்பட்டு சுமாரான அளவுடையதாக அவற்றிற்குரிய விளக்கத்துடன் அமைந்திருந்தது.

❖ஒரிஜென் வாழ்ந்த காலத்திற்கு முன்னதாக யூத கிறிஸ்தவ மறையுரைகள் முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்ட விவிலியத்தினுள் தலைப்புக் களைப் பற்றியதாகவே எப் போதும் இருந்து வந்துள்ளது. ஒரிஜென் இம் முறையிலிருந்து வித்தியாசமாக முன்னதாகவே திருவிவிலியப் பகுதிகளை பல் வேறு தலைப்புக்களில் உள்ள மறையுரைகளாகத் தயாரித் தார். எனவே இவரது மறையுரை கள் தொடர்ச்சியாக வரும் பல் வேறு இறையியல் தலைப் புக்களில் அமைந்திருந்தமை ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய விளக்கவுரையும் வழங்கப்பட் டது. ஒவ்வொன்றிலும் ஒரு சிறிய முன்னுரையும் ஒரு முடிவுரையும் அமைந்திருக்கும்.

❖ ஒரிஜெனுடைய மறையுரை அமைப்பு முறை கிழக்கத்தைய திருச்சபையிலும் மேற்கத்தைய திருச்சபையிலும் பரவலாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பிரபல மறைவல்லுனரும் மறை யுரைஞருமான புனித அகுஸ் தீனார் (354-430) முதலாக பல அம்சங்களில் ஒரிஜெனுடைய மறையுரை அமைப்பைப் பின்பற்றி வந்தார் எனப்படு கின்றது.

### முடிவாக

ஒரிஜெனுடைய இது வரை மறைவாகவிருந்த பாரிய மறையுரைத் தொகுதி கண்டு பிடிக்கப்பட்டமையானது ஆதித் திருச்சபையில் மறையுரைகள் வழியாகத் திருவிவிலியப் படிப் பினைகள் எவ்வாறு வழங்கப் பட்டமை என்பதை தெளிவாக வெளிக்கொணர்கின்றது. தொடக்க காலத்திருச்சபையின் பிரபல இறையியலாளர்களும், திருவிவிலிய வல்லுனர்களுமாயிருந்த மறையுரைஞர்களுடைய மறையுரைகளின் தொகுபபில் இதுவரையில் இருந்த பாரிய இடைவெளி இக்கண்டு பிடிப் பின் வழியாக நீங்கியுள்ளது. அத்துடன் மேற்கொண்டு பல இறையியல் திருவிவிலிய விளக்கவுரை ஆராய்ச்சிகளுக்கு இக்கண்டுபிடிப்பால் புதிய வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

## நிலைவாழ்வில்...

7வது ஆண்டு — 43ஆம் நாள்

இறைவனடி இணைந்த இரு உள்ளங்கள்

## நினைவுகள்

1939-07-21 மண்ணகம் 1943-10-02



செபஸ்ரியன் தம்பிராஜா — அஞ்சலா ஜெனிவி தங்கராஜினி தம்பிராஜா

2005-04-18 விண்ணகம் 2012-08-21

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"-யேசு இரக்கம் நிறைந்த இயேசுவே இவர்களின் ஆன்மா சமாதான ஒளியில் ஒளிர்வதாக.

'உலகில் தன் ஓட்டத்தை நன்கு ஓடி முடித்தார்' புனித சின்னப்பர்

'யார் அறிவார் சா நாளும் வாழ்நாளும்'

வாழ்வில் நேசித்தோம் சாவில் மறவோம்.

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் 02-10-2012 செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்கு இருவருக்கும் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். *நன்றி*

இல. 14, டேவிற் றோட், யாழ்ப்பாணம்.

நன்றிப் பெருக்குடன் நினைவு கூரும் பாசமிகு குடும்பத்தினர்.

Add: 84/12

## 14ம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 08 - 04 - 1968



விண்ணில் 30 - 09 - 1998

### அமரர். மெர்லீன் மைதிலி தார்சீசியஸ்

"சீவியத்தில் என்னை நேசித்த அன்பு உள்ளங்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

அன்பும், அமைதியும் அனைவருடனும் அகமகிழ்ப்பேசிப் பழகிடும் உன் அழகு முகம் எம் இதயங்களில் இன்னமும் பசுமையாய் உள்ளதம்மா.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 29-09-2012 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு கல்கிசை புனித அந்தோனியார் ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்திலும், காலை 6.00 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

163/10, மிருந்து மாவத்தை தெஹிவலை.

அன்புடன் நினைவு கூரும் பெற்றோர், சகோதரர்கள், சகோதரி குடும்பத்தினர், மருமக்கள், உறவினர்கள்.

Add 86/12

# திருவிழா கிறிஸ்தவமா? இல்லை தினம் தோறும் கிறிஸ்தவமா?

**அலசலும் உரசலும் 09**
**(சமகால சமூக ஆன்மீக தொடர்)**
அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

கிறிஸ்தவம் இன்னும் மனித மனங்களில் வேரூன்றவில்லை என்பதற்கு இன்று கிறிஸ்தவம் எப்படி நோக்கப்படுகின்றது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவம் என்பது வெறும் மதம் சார்ந்த போதனைகளை கோட்பாடுகளை வெளிப்படுத்தும் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பல்ல. அது ஒரு வாழ்க்கை முறையை சார்ந்து நிற்கின்றது. இதனை எத்தனை கிறிஸ்தவர்கள் என்று அடையாளப்படுத்துபவர்கள் வாழ்கின்றார்கள் என்பது கேள்விக் குறியே. கிறிஸ்தவம் அமைப்பு ரீதியாக நிறுவனமயப்படுத்தப்படுகின்றபோது அதன் வாரத்தை, சாட்சியத்தை இழந்து விடுகின்றது. அமைப்பை மட்டும் கட்டி காப்பதினால் ஒழுங்கான கட்டமைப்பை கொண்ட சமூகம் உருவாகுமேயொழிய, ஒருமைப்பாடு மக்கள் மத்தியில் உருவாகாது ஒழுங்கமைப்பை உருவாக்குவதை விடுத்து ஒருமைப்பாட்டை, ஒன்றிப்பை உருவாக்குவது தான் இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

**கிறிஸ்தவம் வாழ்வாக வேருன்ற வேண்டும்!**

இன்று பெரும்பாலும் கிறிஸ்தவம் சடங்கு நிலையில் மட்டுமே விளங்கிக்கொள்ளப்படுகின்றது. இதனால் வெளியரங்கத்தில் திருவிழாக்களை கொண்டாடுவதும், இன்றும் சில சம்பிரதாயங்களை கட்டிகாப்பதும் தான் கிறிஸ்தவம் என்ற மாயையில், மயக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவம் வாழ்க்கை முறையாக மாற்றப்படவில்லை. பங்குகளில் எத்தனையோ வழிபாடுகள் புதுப்பித்தல் நிகழ்வுகள் அரங்கேறியும், கிறிஸ்தவம் இன்றும் மேலோட்டமான சடங்கு நிலையில் தான் வாழப்படுகின்றது. அப்படியானால் திருவிழாக்கள் தேவையில்லையா? கொண்டாட்டங்கள் அர்த்தமற்றவையா என்ற வினா எழுகின்றது. அவை தேவை தான்! ஆனால் எவ்வளவு தூரம் திருவிழாக்கள், அருட்சாதன கொண்டாட்டங்கள் கிறிஸ்தவ வாழ்வை புதுப்பித்து அடுத்தவரோடு ஒன்றிப்பில், உறவில், மன்னிப்பில் வாழ உதவியுள்ளதா என்பதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். திருவிழாக்களின் வெளி ஆடம்பர, அமர்க்களங்களுக்காக எவ்வளவோ பணத்தை செல விட்டு ஏதோ இம்முறை திருவிழா பெரிதாக நன் றாக நடந்தது என்று மயக் கத்தில் வாழ்பவரும் உள்ளனர். உண்மையில் உள்ளத்தை தொடாத வாழ்வை மாற்றாத நிகழ்வுகளே, செயற்பாடுகளே கடவுளின் பெயரால் அரங்கேறிக் கொண்டு இருக்கின்றன என்பதை மறுத்து விடமுடியாது. இதன் விளைவாக மனமாற்றம் இல்லாத வாழ்க்கையினால் சடங்குகள் வளர்ந்து கொண்டு செல்கின்றதேயொழிய, மனித இதயங்களில் மாற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை.

**உண்மைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்**

இன்று தலத்திருச்சபைகளிலே, பங்குகளிலே கிறிஸ்தவ வாழ்வை பற்றிய ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். கிறிஸ்தவத்தை இன்றும் அமைப்பு ரீதியாக பலப்படுத்தும் செயற்பாடுகளை விடுத்து கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையை சாட்சியமாக்கும் செயற்பாடுகளுக்கு முதன்மை அளிக்கப் படவேண்டும். இன்று ஏராளமான பங்குப் பணம் ஆலயங்களை அழகுபடுத்துவதற்கும், விசாலப்படுத்துவதற்கும் செலவிடப்படுகின்றது. சில வேளைகளில் ஏட்டிக்கு போட்டியாகவும் ஆலயங்கள் காட்டப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய பணத்தை மறைக்கல்விக்கும், விவிலிய விழிப்புணர்விற்கும், பிறரன்புச் செயல்களுக்கும் பயன்படுத்துவது ஒருவிதத்தில் கிறிஸ்தவர்களின் சாட்சிய வாழ்வை மேம்படுத்த உதவலாம். இன்றும் சில பங்குகளில் பாடகர் குழாமில் பிளவுகள், இறைவார்த்தை பணிகளில் போட்டிகள், பங்குப்பணிகளை செயறபடுதத்துவதில் ஒற்றுமையின்மை போன்றவை ஆண்டவர் பெயரால் நடைபெறும் அராஜகங்களாக இடம்பெறுகின்றன. இவற்றை நோக்கும்போது கிறிஸ்தவம் இன்றும் வாழ்வு சார்ந்ததாக, வாழ்க்கையை ஊடுருவியதாக தெரியவில்லை. இத்தகைய கிறிஸ்தவ வாழ்வை வாழும் கிறிஸ்தவர்களின் போலித்தனங்களை, பொய்மைகளை திறந்த மனதுடன் ஏற்றுமாறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு பங்கிலும் எத்தனேயோ செயற்பாடுகள் நடக்கின்றன. ஆனால் இவை மக்களின் வாழ்வை மாற்ற தூண்டுதலாக இருந்தவையா எனபதை மீளாய்வு செய்து திட்டங்களை தீட்ட வேண்டும்.

**தினம் தோறும் கிறிஸ்தவமாக மாற**

கிறிஸ்தவம் திருவிழா, ஞாயிறு, இன்றும் கடன் திருநாட்களில் மட்டும் நடைபெறும் ஆன்மீக வாழ்வல்ல என்பதை முதலில் உணர வேண்டும். தினம்தோறும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைவனோடும், அயலவனோடும் எபபடி உறவில் வாழ்கின்றான் என்பதை பொறுத்தே அமைகின்றது. கடவுளோடு உறவாட தினம் தோறும் செபம், இறைவார்த்தை, தகுந்த ஆயத்தத்துடன் அருட்சாதனம் போன்ற ஆன்மீக அனுபவத்திற்கு இட்டுச் செல்லும் செயற்பாடுகளை முதன்மைப்படுத்த வேண்டும். அடுத்தவரின் நலனில் அக்கறையோடு செயற்பட்டு தினம்தோறும் பகிர்விலும், தோழமையிலும், மன்னிப்பிலும் உண்மைத்தனமான உறவுகளை வளர்க்க முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு கணமும் நான் கிறிஸ்துவை சார்ந்தவன் என்ற உணர்வில் வாழும் போதே கிறிஸ்தவம் சாட்சியமுள்ள வாழ்க்கை முறையாக மாறும். கிறிஸ்தவம் வாழ்க்கை முறையாக வாழப்படாததால் இன்று வழிபாடுகள், பக்தி முயற்சிகள் இடம்பெற்றாலும் மக்களின் இதயங்களில் மாற்றம் இல்லை! இன்றும் கிறிஸ்தவ சமூகம் ஒருமைப்பாட்டில் வாழ முடியாது தத்தளிக்கின்றது. கிறிஸ்தவம் ஆழமான இறையனுபவமாக மனித உள்ளங்களில் வேரூன்றவில்லை. இதுவே பங்குகளிலும், சமூகங்களிலும், ஏன் நமது தேசத்திலும் நடைபெறுகின்ற பிரச்சினைகளுக்கும், பகைமைகளுக்கும், நல்லிணக்கமின்மைக்கும் காரணமாகும் என்பதை உறுதியாகக் கூற முடியும். கிறிஸ்தவத்தை சடங்காக்குவதை விடுத்து வாழ்வாக்க முயற்சி செய்வோமா!

(உரசல் தொடரும்)

## இலங்கை ஆயர்...(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே சிறைக கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதும், தேசிய சட்ட விதிகளுக்கமைய அவர்களின் மாண்பைப் பேண வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுபபாக உள்ளது. நாட்டின் கல்வி நிலை பற்றியும் நாம் ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பரீட்சை நடாத்தப்படும் விதத்தில் கடும் அதிருப்தி நிலவுகிறது. எமது பல்கலைக்கழகங்கள் அடிக்கடி மூடப்படுவதால் மாணவர்கள் அதைரியம் அடைகிறார்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைகளையும் தீர்க்கப்பட வேண்டும்.

இந்த பிரச்சினைகளால் பாதிக்கப்படும் மாணவர்களின் நிலையைக் கருதி இது பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்தையும், சமமந்தப்பட்டவர்களையும் கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டிக் கொள்கிறது. எமது பிள்ளைகளின் நலன் கருதி நாட்டில் சுமுக நிலை ஏற்பட வேண்டும்.

வடமத்திய மாகாண விவசாயிகளும் அனைத்து விவசாயிகளும் நாட்டுக்குத் தேவையான அளவு அரிசியை விளைவிப்பதில் பெரும் கஸ்டங்களை எதிர் நோக்குகிறார்கள். இவர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

இறுதியாக அரசியல் தீர்வும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. நீடிய யுத்தத்தால் துன்பப்பட்ட நாட்டு மக்கள் நிலையான அமைதியை விரும்புகிறார்கள். ஆகவே இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை நாட்டு பிரச்சினைகளைத் தீர்த்து இலங்கை மக்களுக்கு உண்மையான அமைதியையும், நீதியையும் தரும் அரசியல் தீர்வுக்காக உழைக்குமாறு அரசாங்கத்தையும் சம்மந்தப்பட்டவர்களையும் கேட்டுக் கொள்கிறது.

## அஞ்சனந்தாழ்வு தூய ஆரோக்கிய அன்னையின் திருவிழா 09-09-2012

இவ்வருடம் மறைக் கல்வி ஆணடை முன்னிட்டு இவ்வாலயத்தின் திருவிழாவிற்கான நவநாள் கருப்பொருட்களை பத்துக் கற்பனைகளிலிருந்தும் திருச்சபையின் ஆறு ஒழுங்குகளிலிருந்தும் எடுக்கப்பட்டிருந்தது. ஒகஸ்ட் மாதம் 31ம் திகதி கொடியேற்றத்துடன் நவநாட்கள் ஆரம்பமாகியது. நற்கருணை விழாவினை அருட்தந்தை லம்பேட் (அமதி) தலைமை தாங்கினார். திருநாள் திருப்பலியை அமலமரித் தியாகிகளின் மாகாண முதல்வர் அருட்பணி. போல்நட்சத்திரம் (அமதி) அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச்சுரூப பவனியும், ஆசீரும் இடம் பெற்றது.

ட. விதுர்ஷனா

## குடும்ப மறைக்கல்விக் கருத்தமர்வு – இளவாலை மறைக்கோட்டம்

எல்லோருக்கும் மறைக்கல்வி என்ற இலக்குடைய இவ்வாண்டின் ஒரு சிறப்புச் செயற்பாடாக 2012-08-31, அன்று சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தலத்தில் இளவாலை மறைக்கோட்ட மக்களுக்கென இக்கருத்தமர்வு இடம்பெற்றது. அதில் இளவாலை, விளான், சில்லாலை, குழமங்கால், மாதகல் பங்குகளிலிருந்து ஏறத்தாழ 150 மக்கள் பங்குபற்றினர்.

தற்கால உலகம் உலகமயமாக்கலில் சிக்கி, ஒரு அழிவுத்திசையை நோக்கி விரைகின்றது. அதற்கும் தன் பணியைச் செய்வதற்கு, திருச்சபையும் புதிய கண்ணோட்டத்துடன் புதிய உத்திகளைக் கையாளவும், புதிய சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் புகுத்தவும் முயற்சிக்கின்றது. இதன் வெளிப்பாட்டில் ஒன்றே மறைக்கல்வி என்பது பாடசாலைப் பிள்ளைகளுக்கும் வகுப்பறைச் சூழலிலும் இடம்பெறும் ஒன்று என்ற மட்டுபபடுத்தபபட்ட கருத்தை விரிவாக்கி, ஆதியிலிருந்ததும் பின்பு அருகிப்போனதுமான குடும்ப மறைக் கல்விக்குப் புத்துயிர் அளிப்பதாகும். அது குடும்பத்திலேயே, நடைமுறை வாழ்வுச் சூழலில், காலவரையின்றி, முழு நாளும், வாழ்வு பூராகவும் இடம்பெறுவதாகும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. கருத்துரைகளை அருட்தந்தையர்கள் ஜெயசீலன், ஸ்ரான் பிலிப் (அமதி) மறை ஆசிரியர் பங்கிராஸ் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வை அருள்பணி. சந்திரபோஸ் அவர்களும், ஏனைய பங்குத்தளக் குருக்களும் தொண்டர்களும் ஒழுங்கு செய்திருந்தனர்.

## மன்னார் கரிசல்.. (1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோன்ற மத வழிபாடுகளைக் குழப்பும் சம்பவங்களும் பயமுறுத்தல்களும் இங்குள்ள மத நல்லிணக்கத்தை விரும்பாத ஒரு சிலர் மேறகொள்ளும் செயல்களாகும். பொலீசார் உடனடியாகச் செயல்பட்டு இச்செயலில் ஈடுபட்டோரையும் இதன் சூத்திரதாரிகளையும் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். இது போன்ற செயல்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பது மேன் மேலும் மதநல்லிணக்கத்துக்குப் பாதகமான செயல்கள் இடம் பெறத்தூண்டுதலாக இருக்குமெனச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

■ அருட்பணி. S.V.R. மங்களராஜா
தலைவர் நீதி, சமாதான ஆணைக்குழு, யாழ் மறைமாவட்டம்


## 31ம் நினைவு நாள்

மண்ணில் 04-02-1945
விண்ணில் 18-08-1912



சீவியத்தில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்

நீர் நித்திய வாழ்வில்
இன்புற்றிருக்க நித்தம்
இறைவனை வேண்டுகிறோம்.

உம் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர
சகோதரிகள், உற்றார்
உறவினர்.

திருமதி. விபியானா
பொன்ராணி யேசுதாசன்

ஆசீர்வாதம் அச்சகம்
51கண்டி வீதி
யாழ்ப்பாணம்.

Add: 85/12


## புலோப்பளையில் தேசிய இளையோர் தினம் நினைவு கூரப்பட்டது

புலோப்பளை இளையோர் ஒன்றியத்தினால் கடந்த ஞாயிறு இளையோர் தினம் சிறப்பான முறையில் நினைவுகூரப்பட்டது. ஞாயிறு திருப்பலியினை சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தி, திருச்செபமாலை பவனி இளையோர் ஒன்றிய கொடியேற்றம், சிறப்பு ஆசீர்வாதம் ஆகியவற்றுடன் திருப்பலி நிறைவுற்றது. மதிய உணவினை இளையோர் தாமே தயாரித்து மகிழ்ந்தனர். வளவாளர் திரு. சத்தியன் அவர்களினால் இளையோரின் ஆளுமை வளர்ச்சி என்னும் கருப்பொருளில் கருத்துரை வழங்கப்பட்டது. மதியம் நற்கருணை ஆசீர் இடம்பெற்று இளைஞர்கள் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து நன்றி கூறினார்கள்.

இதனைத் தொடர்ந்து மகிழ்வின் அடையாளமாக விருந்துபசாரமும் அதன் பின்பு திரைப்பட காட்சியும் காண்பிக்கப்பட்டது. இளைஞர்கள் யுவதிகளின் ஆன்மீகவாழ்வையும், குழுச்செயற்பாட்டையும் ஆளுமை வளர்ச்சியையும் வெளிப்படுத்திய நிகழ்வாக இவ்விழா அமைந்திருந்தது.

- இளையோர் பிரதிநிதி

# யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத் திருவிழா

### அருள் நிறைந்தவளே வாழ்க! என்று இறைவனே வாழ்த்தி நிற்க...

யாழ்நகரின் மத்தியில் கம்பீரமான தோற்றத்துடன் அழகுற அமைந்திருக்கும் புனித அடைக்கல அன்னை ஆலய திருவிழாவை பங்குத்தந்தை அருட்பணி. ம. றெஜி இராஜேஸ்வரன் 30-09-2012 கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

அருட்தந்தையர்களின் ஆன்மீக சொற்பொழிவுகள் நவநாள் வழிபாடுகளை பக்திபரவசமாக்கியது. அருட்பணி. அன்புராசாவின் அ.ம.தி முத்தான கருத்துக்கள் இறுதிநாள் நற்கருணை வழிபாட்டில் அனைவரும் அர்த்தத்துடன் பங்கேற்க உதவியது. "யேசு எங்கள் நினைவால் நிறைந்து தன்னையே நற்கருணையில் தந்துவிட்டு போனது போல நாமும் இன்று அவர் நிறைவால் நிறைந்திருக்க அதே நற்கருணை துணை செய்வதாக" என்று கூறி நின்றார்.

திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்பணி. J.B. அன்ரனிதாஸ் தனது மறையுரையில் பிரிவினைச் சகோதரர் "ஏன் அன்னை மரியாளுக்கு இவ்வளவு முதன்மையான இடம் கொடுக்கிறீர்கள் என்று வினவியபோது" அருள் நிறைந்தவளே வாழ்க எனறு இறைவனே தன் திருத்தூதர் மூலமாக மரியாளை வாழ்த்தி நிற்க நாம் எவ்விதம் அவளுக்கு முதலிடம் கொடுக்காது, வாழ்த்தி மேன்மைப்படுத்தாது இருக்க முடியும் என்று பதில் அளித்தாகக் கூறினார்.

இறுதியாக அன்று மாலை திருச்சுரூப பவனி முடிவில் திருச்சுரூப ஆசீருடன் அன்னையின் திருவிழா இனிதே முடிவடைந்தது.

N. Florence Rajini

# இத்தாலியில் பத்துக்கட்டளைகளுக்கான பத்து பொது சதுக்கங்கள்

நற்செய்தி அறிவிப்பை ஊக்கப்படுத்தும் திருத்தந்தையின் மன்றத்தின் அனுசரனையுடன் தூய ஆவியில் புதுப்பித்தல் இயக்கத்தின் முன்னேற்பாட்டில் பத்துக்கட்டளைகளுக்கான பத்து பொது சதுக்கங்கள் (Square) இத்தாலி நாட்டின் பத்து நகரங்களில் அமைக்கபபட்டுள்ளன. கடந்த 08-09-2012 அன்று உரோமாபுரியிலுள்ள மக்கள் சதுக்கத்தில் (Prazza del popolo) தொடக்க நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வையொட்டி திருத்தந்தை 16ம் பெனடிற் வெளியிட்ட செய்தியில் "பத்துக்கட்டளைகள் நாம் இறைவனிடம் செல்வதற்கான பாதை" என குறிப்பிட்டார். ஆரம்பிக்கப்பட்டுள்ள விசுவாச ஆண்டில் பத்து நகரங்களிலுள்ள இச் சதுக்கங்களில் மாலை நேரங்களில் பத்துக்கட்டளைகளை மையப்படுத்தி இறைவார்த்தை, தியானம், பாடல்கள், செபங்கள் நடை பெறவுள்ளன.

# அரியாலை முன்பள்ளி திறப்பு விழா

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினரால் அரியாலை புனித யூதாததேயு முன்பள்ளி நிர்மாணிக்கப்பட்டு 03.09.2012 அன்று அதி வணக்கத்துக்குரிய யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இம்முன்பள்ளிக்கான 2,175,431ரூபா நிதி ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த Kinder missions work நிறுவனத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆயர் தனது உரையில் இம்முன்பள்ளி எமக்கு கிடைத்த வரப்பிரசாதம் எனவும் எமது சொத்தை நாமே பாதுகாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும் இந்நிகழ்வில் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் இயக்குனர் அருடபணி.ஜோ.சே.பேணாட் றெக்னோ அடிகளார், முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி. றெக்ஸ் சவுந்தரா மற்றும் பங்குத்தந்தை அருட்பணி. நீககிலஸ் அடிகளார் புதிய குரு அருட்பணி. அலன் ஆகியோர் மற்றும் பணியாளர்கள், பங்குமக்கள், சிறார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பாகிஸ்தானில் தேவ நிந்தனைச் சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்ட சிறுமி பிணையில் செல்ல அனுமதி

பாக்கிஸ்தானில் நிலவிவரும் தேவ நிந்தனைச் சட்டத்தின் கீழ் றிம்ஷா மாசீ (Rimsha Masih) என்ற 11வயது நிரம்பிய சிறுமி சிறையில் அடைககபபட்டார். அரேபிய மொழியையும், குரானையும் சொல்லித்தர உதவும் ஒரு நூலின் சில பக்கங்களை றிம்ஷா எரித்தார் என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து அவளைக் கொல்வதற்கு திரண்ட மக்களிடமிருந்து காவல்துறை அச்சிறுமியை அப்புறப்படுத்தி கைது செயதனர். மன்நிலைக் குறைவுள்ள சிறுமியின் கைது அப்பகுதி மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இச் சம்பவத்தால் வன்முறைகள் பெருககக்கூடும் என்ற அச்சத்தில் அப்பகுதியிலிருந்து 300க்கும் மேற்பட்ட கிறிஸ்தவக்குடும்பங்கள் வெளியேறியுள்ளன. பாகிஸ்தானில் 1986ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தேவ நிந்தனைச் சட்டத்தின் கீழ், இதுவரை குறைந்தது 1000 பேருக்கு மேல் குற்றம் சாட்டப்பட்டுளளனர். வயது குறைந்த ஒருவரை தேவ நிந்தனைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருப்பது இதுவே முதல் முறை. இக்கைது தொடர்பாக உலக நாடுகளிலிருந்து பலர் கண்டனங்களை வெளியிட்டனர். ஈற்றில் சில நாட்களாக நடைபெற்ற விசாரணையின் பின்னர் சிறுமி றிம்ஷா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# தேசிய இளையோர் தினத்தில் தாளையடிப்பங்கு இளையோர் ஒன்றியம் உதயம்

உலகமே இளையோர்களின் செயற்பாடுகளையும் ஆற்றல்களையும் வாழ்த்திப் பாராட்டும் வேளையிலே தாளையடிப்பங்கு தனக்கென இளையோர்களைக் கொண்டு வீறுநடைபோட ஆரம்பித்துள்ளது. இளையோர் தின வாரத்தில் ஞாயிறு வழிபாடுகள் இளையோரால் சிறப்பான முறையிலே முன்னெடுக்கப்பட்டன. பங்கு இளையோர்கள் தாளையடி புனித. அந்தோனியார் ஆலயத்தில் 09-09-2012 அன்று ஒன்று கூடினர். இந்நிகழ்வானது முழு நாள் பகல் நிகழ்வாக செல்வன் ஜெபதாஸ் தலைமையில் ஆரம்பமானது.

புதிதாக வடிவமைக்கபட்ட தாளையடி பங்கு இளையோர் ஒன்றியக் கொடியை பங்குத்தந்தை ம. யேசுரட்ணம் அடிகள் ஏற்றி அந்நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து ஆசி வழங்கினார். வரவேற்புரையை செல்வன பெ. றீகராஸ் நிகழ்த்தினார். தொடர்ந்து அருட்பணி. கொன்பியூசியஸ் (அமதி) தலைமையிலான வளவாளர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு பல்வகை நிகழ்வுகள் நடைபெற்றன. பின்னர் பங்கு இளையோர் ஒன்றியம் புதிய தெரிவு இடம்பெற்றது. இதனை உதவிப்பங்குத்தந்தை ஆ. ஜஸ்ரின் நெறிப்படுத்தினார்.

ஏறக்குறைய 10 வருடங்களின் பின்பு இவ்வாறான ஒன்று கூடலும் நிர்வாக அமைப்பும் பங்குரீதியாக ஏற்படுத்தப்பட்டது. இளையோரின் எதிர்கால செயற்பாடுகளுக்கு பெரும் உதவியாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. இவ் ஒன்றுகூடலுக்கு கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, தாளையடி, செம்பியன்பற்று, நாகர்கோவில், குடாரப்பு ஆகிய உபபங்குத்தளங்களைச் சார்ந்த ஏறக்குறைய 160 இளையோர் வருகை தந்திருந்தனர். இவ்வாறு இளையோர் தினம் மீண்டும் பங்கு இளையோர் மத்தியில் புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது.

- ஜெபதாஸ் -

# புனித மிக்கேல் ஆலயத்தில் உறுதிபூசுதல் விழா

09-09-2012இல் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில், யாழ். ஆயர் தலைமையில் 128 மாணவர்களுக்கு உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. காலை 6.30மணிக்கு ஆயரை உரும்பிராய் பங்குமக்கள் எல்லோருமாக சேர்ந்து ஆலய முன்றலிலிருந்து பாடசாலை மாணவர்களின் பான்ட்வாத்தியத்துடன் வரவேற்க நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் அருட்பணி. மங்களராஜ் அடிகளாரும், அருட் சகோதரன் நிர்மல் (சல்வற்றோரியர் சபை) அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். ஆயர் தனது மறை உரையில் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகள் பற்றியும், ஆவிக்குரிய வாழ்க்கை முறைபற்றியும் மிகவும் அழகாக மறை உரை ஆற்றினார். தொடர்ந்து அவர் கூறுகையில் ஊன் இயல்புள்ள செயற்பாடுகளை விட்டு ஆவியின் வாழ்க்கையை கைக்கொள்ள வேண்டுமென்றும் உலகிற்கு நற்செய்தியை வாழ்க்கையால் பறைசாற்ற உங்களை நான் அனுப்புகிறேன் என்றும் விளக்கமளித்தார். ஆயரின் இறுதி ஆசீரோடு நிகழ்வு இனிதே நிறைவெய்தியது.

## மழைக்காக செபிப்போம்

பருவகால மழை ஆரம்பிக்காமையினால் பெரும் வரட்சியை எதிர்நோக்குகின்றோம். இவ் வறட்சியினால் குளங்கள் வற்றி கால்நடைகள் நீருக்காக அலைகின்றன; பல இடங்களில் குழநீர் தட்டுப்பாடு ஆரம்பிக்கப்பட்டுவிட்டது; விவசாய நிலங்கள் பயனற்றுப்போகின்றது. இந்நிலையில் வெகு விரைவில் மழை பொழிந்து எம்மண் செழிப்புறவும் உயிரினங்கள் உயிர்வாழவும் செபிப்போம்.

# ஆனந்தபுரம் - மந்துவில் சந்தியில் மீண்டும் புனித அந்தோனியார் சுரூபம்



போரினால் மிகவும் பாதிப்புற்ற ஆனந்தபுரம் மற்றும் மந்துவில் சில பகுதி மிக அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. இங்குள்ள மல்லிகைத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு செல்லும் வழியை குறித்துக் காட்டும் புனித அந்தோனியார் சுரூபம் முழுமையாக சேதமுற்றிருந்தது. இதை வீதியால் சென்ற யாழ். மறைமாவட்ட குருக்கள் குழு ஒன்று அவதானித்து திரும்பி வரும்போது சகல ஏற்பாடுகளையும் செய்து 10-09-2012 அன்று மாலை சிறிய செபவழிபாட்டுடன் மீண்டும் அவ்விடத்தில் புனித. அந்தோனியார் சுரூபம் வைக்கப்பட்டுள்ளது.

# ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய திருவிழா

ஆனையூர் அடைக்கலநாயகி ஆலய திருநாளுக்கான நவநாட்கள் 30-08-2012ல் ஆரம்பமாகியது. அன்றைய தினம் புதிதாக அமைக்கப்பட்ட வரவேற்பு மாதா திருச்சுரூபம் அருட்பணி. அன்ரன் மத்தியாஸ் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொடியினை பங்குத்தந்தை J.B. ஜோதிநாதன் அவர்கள் ஏற்றி நவநாள் வழிபாடுகளை ஆரம்பித்து வைத்தார். நவநாள் திருப்பலி நாட்களில் ஒவ்வொரு கருப்பொருளை மையமாக வைத்து அருட்பணி. பிலிப் றஞ்சன குமார் (அமதி) அவர்கள் வழிபாடுகளை ஒழுங்கு செய்து எல்லோரையும் ஆன்மீக பாதையில் வழிநடத்திச் சென்றார்.

நற்கருணை விழாத் திருப்பலியினையும், ஆசீரையும் அருட்பணியாளர்கள் எட்மன் மைக்கல் மங்களராஜா அடிகளார்கள் சிறப்பித்தனர். இறுதி நாளில் மரியன்னையின் திருநாள் **"பிள்ளைகளாகிய நாங்கள் அன்னைக்கும் கொடுக்கும் பிறந்த நாள் பரிசு என்ன"** என்னும் மையப் பொருளில் திருப்பலி அருட்பணி. ஸ்ரனிஸ்லாஸ் பிலிப் (அமதி) அவர்களால் சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து திருச்சுரூப பவனி ஊர்மத்தியில் பக்தியுடன் இடம் பெற்று இறுதியில் அன்னையின் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து திருநாளினை சிறப்பிக்கும் முகமாக மாலையில் வலயங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டியும், இரவு இளைஞர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இசை நிகழ்வும் மகிழ்ச்சியான முறையில் இடம் பெற்றது. இசை நிகழ்வின் போது போட்டியில் வெற்றி பெற்ற வலயங்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பரிசளிக்கப்பட்டது. நீண்ட நாட்களின் பின் இவ்வாறான நிகழ்வு இடம்பெற்றதினால் ஆலய மக்கள் மகிழ்ச்சியும் மன நிறைவும் பெற்றனர்.

■ சு. பிறேமிலா

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.